தென்மொழி

T. 5844

உ. த. மு. கழகம் நிலைக்க!

தாய்தமிழ் ஓங்குக!
தொலைக, மதம், சாதி!
ஏடிப் அரசியல்
இழிவுகள் அகல்க!
பொருந்துக தமிழியப்
பொதுமைப் பொருளியல்!
திருந்துக கலைகள்!
திகழ்க, பண் பாடு!
அறிவியல் நோக்கொடு
வாழ்க்கை அமைக!
நெறியிவை கொண்ட
கழகம் நிலைக்கவே!

சுவடி : 19 விலை
ஓலை : 2 உருபா 1-25

சே.எண்: 26041

நமக்கு வந்த மடல்கள்.

0 : 947 : மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். தங்களை நேரில் கண்டதில் மட்டற்ற மகிழ்ச்சி. எவ்வளவோ முன்னேற்பாடுகளோடு இருந்தும்கூடத் தாங்கள் வந்தபோது நேரில் இருந்து போற்றி உதவமுடியாது போனது, தங்களைப் பிற தலைவர்களைப் போல எண்ணியதேயாகும். அதற்கு மிக வருந்துகிறேன். மன்னிக்க வேண்டிக் கொள்ளுகிறேன். காலந்தவறாமையும், கணக்கில் பிழையாமையும், பொருளைப் பேணுதலும் போன்றவற்றிலும்கூடத் தாங்கள் மேற்கொள்ளும் நெறிகள் தந்தை பெரியாரை நினைவூட்டுகின்றன. தாங்கள், தந்தை பெரியாரின் கொள்கைகள் பேணுவாரற்றுப் போன இற்றை நாளில், அவரின் கொள்கை விளக்கமாக, வடிவமாகச் - செயலாக்கமாக - விளங்குவது கண்டு மகிழ்கிறேன். பெருமிதம் கொள்ளுகிறேன். தந்தை பெரியாரின் பணியைத் தொடர்ந்தாற்றுகின்ற தங்களின் செயன் முறைகளுக்கு நானும் பயன்படுவேனென்றெண்ணிய தங்களுக்கு நன்றி கூறுகிறேன். பெரும் பணியை நம்பிக்கையோடு தந்துவிட்ட உங்களின் உள்ளம் நம்பும்படி—மகிழும்படி—வியக்கும்படி கூட உறுதியோடு செயல்படுவேனென்று உறுதி கூறுகிறேன். தந்தை பெரியாருக்குப் பிறகு தமிழினம் (திராவிட இனம்) என்னுகுமோ? தலைமையைக் கிழறுக்கும் அறிஞரும், குழிபறிக்கும் தொண்டருந்தாமே உள்ளனர் என எண்ணி ஏங்கினதுண்டு. ஆனால் சிதலை தினப்பட்ட ஆலமரத்தை அதன் வீழ்தூன்றிக் காத்தாற்போல இனமானம் காக்க, மொழிநலம் பேணத் தந்தைக் கேற்ற மகனாய்த் தாங்கள் துணிந்தெழுந்து செயல்படுவது, இனமும் மொழியும் பெற்ற பேறேயாகும். தங்கள் ஊக்கமும் முயற்சியும் பணியும் சிறக்க வாழ்த்துகிறேன்.

நம் இனத்திற்கு இன்சொல்லும் மென்செயலும் பயன்பாடா. தென்மொழிக் கடுஞ் சொல்லினும் கொடுமொழிக் கடுஞ் சொல் வேண்டும். மானமும் சுரணையும் ஊட்டத்தக்க செயல்பாடுகள் வேண்டும். ஆரிய நஞ்சேறிக் கீழ்களாகிவிட்ட இவர்கள் கருப்பு போல் கொல்லப் பயன்படுங்கீழ் என்பதற்கேற்பக் கொல்லப் பட்டாலொழியத் தன்மானமும் தன்னுணர்வும் பெறுதல் அரிது. என்று 'இவைகள்', திருந்துமோ? என்று நம் எண்ணம் நிறைவேறுமோ?—என்று கவலைப்படும் வேளைகளிலெல்லாம் தந்தை பெரியாரின் அறிவுரைகள்தாம் ஆறுதல் அளிக்கின்றன. முன்பெல்லாம் தி. க. பொதுக்கூட்டங்களில் வினவும் பழக்கமும் அதற்கு அங்கேயே விடையிறுக்கும் முறையும் உண்டு. ஒருமுறை தந்தை பெரியார் அவர்களிடம் பொதுக்கூட்டத்தில் வினா ஒன்று கொடுக்கப்பட்டது. நீங்கள் கூறும் திராவிட நாட்டை எவ்வளவு காலத்தில் அடையப்போகிறீர்கள் என்பது அவ் வினா. அதற்கு ஐயா அவர்கள், 'ஆங்கிலேயர்கள் இந்தியாவை 150 ஆண்டுகள் அடிமைப்படுத்தி ஆண்டார்கள். அவர்களிடமிருந்து விடுதலைபெற ஏறத்தாழ அறுபது எழுபது ஆண்டுகள் போராட வேண்டியதாகிவிட்டது. ஆனால் ஆரியர்களோ திராவிடர்களை ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

T. 5844 தமிழகம்

கழகத்தின் செய்தியிதழ்

தமிழ் நிலம்

கிழமை இதழ் (Weekly)

வெளியீட்டு விழா அழைப்பிதழ்

பேரன்புடையீர், வணக்கம்.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் செய்தி இதழாகச் சென்னையிலிருந்து வெளிவரவிருக்கும் **தமிழ் நிலம்** கிழமையிதழின் வெளியீட்டு விழா, நிகழும் திருவள்ளுவராண்டு 2013, துலை 21 (7-11-82)ஆம் பக்கல் ஞாயிறு பிற்பகல் 4 மணியளவில், சென்னை-6 தேவநேயப் பாவாணர் மாவட்ட நடுவண் நூலகச் சொற்பொழிவு அரங்கில்,

திரவிடமொழிக் கதிரவன், பன்மொழிப் புலவர்

உயர்திரு. **கா. அப்பாத்துரையார்** க. மு.

அவர்களின் தலைமையில் நடைபெறவிருக்கிறது. அது பொழுது, அதன் முதல் இதழை,

ஆட்சி மொழிக் காவலர்

உயர்திரு. **கீ. இராமலிங்கனார்** க. மு.

அவர்கள் வெளியிட,

தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சர்

மாண்புமிகு. பர். **கா. காளிமுத்து** க. மு.

அவர்கள் பெற்றுக் கொள்வார்கள், அக்கால்,

கழக முதல்வரும், இதழின் சிறப்பாசிரியருமாகிய

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

அவர்களும், மற்றும் அறிஞர்கள் பலரும் சிறப்புரையாற்றுவார்கள். அவ்விழாவிற்கு வந்திருந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙன்

விழாக் குழுவினர்

தமிழ் நிலம்

உ. த. மு. க. செய்தியிதழ்

(கிழமை வெளியீடு Weekly)

சிறப்பாசிரியர்:

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

0 இஃது ஓர் உ. த. மு. க. வெளியீடு

0 சென்னையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெளியூர்களில் ஒவ்வொரு காரி(சனி)க்கிழமையும் கிடைக்கும்.

0 ஒவ்வோரிதழிலும், ...

- 0 உ. த. மு. க. செய்திகள்;
- 0 அரிய வரலாற்றுப் பொருளியல் கட்டுரைகள்;
- 0 மொழி, இன ஆராய்ச்சிக் கட்டுரைகள்;
- 0 இன, நாட்டு விடுதலை வரலாறுகள்;
- 0 கலை, இலக்கியச் செய்திகள், கதைகள்!
- 0 சூடான நடைமுறை அரசியல் திறனாய்வுகள்;
- 0 பிற சிறப்புச் செய்திகள்!

.... அனைத்தும் இடம் பெறும்!

0 இதழின் அளவு ½ டெம்மி, (16½" × 11¼")

0 விலை விளக்கம்:

தனியிதழ்	0.65 காசு
ஆறு மாதக் கட்டணம் (26 கிழமைகள்)	18.00 உருபா
ஓர் ஆண்டுக் கட்டணம் (52 கிழமைகள்)	36.00 உருபா
ஐந்தாண்டுக் கட்டணம்:	175.00 உருபா

0 ஓரிதழ்க்கு 4 உருபா முன் பணம் கட்டக்கூடிய முகவர்கள் எழுதிக் கேட்க

தமிழ் நிலம்
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5

'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' படியங்கள், சென்னை-5

‘தமிழ் நிலம்’ கிழமை இதழ் வெளியீட்டு விழா

: நிகழ்ச்சி நிரல் :

இடம் : தேவநேயப் பாவாணர் மாவட்ட
நடுவண் நூலகச் சொற்பொழிவரங்கம்
(Lecture Hall)
அண்ணாசாலை, சென்னை—6.

நாள் : தி. பி. 2013, துலை 21 (7-11-82)
ஞாயிறு

தொடக்க நேரம் : பிற்பகல் 4 மணி

தமிழ் வாழ்த்து (2 நிமையம்)
செல்வி. மா. செந்தாமரை (அறி. மு..)

தலைவரை முன் மொழிதல் : (6 நிமையம்)
தென்மொழி. **ப. துரையரசன்** க. இ.
(உ. த. மு. க. அமைப்புச் செயலர்)

தலைவரை வழி மொழிதல் :
(6 × 2 = 12 நிமையம்)

தென்மொழி. **ந. முத்துக்குமரன்** அறி. இ.
(உ. த. மு. க. தலைமைக் கழக முதன்மைக் குழு உறுப்பினர்.)

சொல்லாய்வறிஞர். **ப. அருளி** வணி, இ., ச. இ.
(புதுவை மாநில உ. த. மு. க. அமைப்பாளர்)

வரவேற்புரை : (10 நிமையம்)
புலவர். **இறைக்குருவனார்**
(உ. த. மு. க. தலைமைக் கழக முதன்மைக்குழு உறுப்பினர்)

தலைமையுரை : (30 நிமையம்)
திரவிட மொழிக் கதிரவன், பன்மொழிப் புலவர்
கா. அப்பாத்துரையார் க. மு.
(தொகுப்பாசிரியர், ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம்
சென்னைப் பல்கலைக் கழகம்)

'தமிழ் நிலம்' வெளியீட்டுரை (30 நிமையம்)

ஆட்சி மொழிக் காவலர்

கீ. இராமலிங்கனார் க. மு.

ஏற்புரை: (45 நிமையம்)

தமிழ்நாடு அரசு, வேளாண்மைத்துறை அமைச்சர்

மாண்புமிகு. புர். **கா. காளிமுத்து** க. மு.

சார்புரை: (15 × 5 = 75 நிமையங்கள்)

பர். **க. ப. அறவாணன்** க. மு.

(பேராசிரியா, இலயோலாக் கல்லூரி, சென்னை)

வழக்கறிஞர். **கு. ச. ஆனந்தன்** வணி. இ., ச. இ.,

(ஆசிரியர் 'மலர்க மாநில சுயாட்சி')

பேரா. **கு. வெ. கி. ஆசான்** க. மு.

(உ. த. மு. க. கோவை மாவட்ட அமைப்பாளர்

ஆசிரியர் 'அங்கும் இங்கும்')

பர். **ஆறு. அழகப்பன்** க. மு.

(இயக்குநர், தமிழ், வடமொழி மற்றும் பிற இந்திய மொழிகள்

ஆராய்ச்சி நிறுவனம், சென்னை)

தமிழீழ விடுதலைப் புலி

உமாமகேசுவரன் (முகுந்தன்)

(பொதுச் செயலாளர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்)

கொள்கை விளக்கப் பேருரை: (45 நிமையம்)

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(முதல்வர், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

ஆசிரியர் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு'.)

தலைவர் நிறைவுரை: (30 நிமையம்)

நன்றியுரை: (5 நிமையம்)

மா. பூங்குன்றன் அறி. இ., க. மு.,

(செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,

சென்னை-8.)

தமிழர் ஒருங்கிணைப்புப் பாடல்: (5 நிமையம்)

சோ. ஆற்றலரசு க. இ. ப. முருகவேள்

செ. கண்ணன், மா. பொழிலன்

நிகழ்ச்சியில் கலந்துகொள்பவர்கள் அனைவரும் கட்டாயமாக ஒதுக்கப்பெற்ற நேரத்தைக் கடைப்பிடிக்கக் கேட்டுக் கொள்ளப் [illegible]

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : **பெருஞ்சித்திரனார்**

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன் (சிங்கை),
தென்மொழிமறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக்குமரனார்
தென்மொழி ப. துரையரசன், தென்மொழி. நா. இளமாறன்.
அமைச்சர் : அழ. இளமுருகன், அறி. இ.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 19] தி. பி. உ0கங கன்னி (செப்-அக்'82) [ஓலை 2

'தமிழ்நிலம்' மலர்ந்தது!

சென்ற ஆண்டு இதே பொழுதில் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' அரும்பியது. இன்று, அதன் செய்தியிதழாகிய தமிழ் நிலம்—கிழமையிதழ்— மலர்ந்திருக்கிறது! ஆம்! ஓராண்டுக் கடுமையான உழைப்பின் விளைவாக, தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் உ.த.மு.க. அமைப்புகள் மலர்ந்து விளங்குகின்றன! அவற்றின் பெரும்பாலான வட்டங்களில் வட்டக் கிளைகள் தோன்றிப் பொலிவுற்றுக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் 'தமிழ்நிலம்' தோன்றியுள்ளது! பொருளில்லாமல், அரசியல் நோக்கம் இல்லாமல், வேறு எந்த

ஒரு தனிப்பட்ட கட்சியினதும் துணையில்லாமல், அரசினரின் ஆட்சித் தழுவல் இல்லாமல், கள்ளத் தாள்களின் கடைக்கண் பார்வையில்லாமல், விளம்பரமே இல்லாமல், நேர்மையும், உண்மையும் கொள்கையும் கொண்ட ஓர் உழைப்பியக்கம், இப்படி ஓராண்டிற்குள் ஆழ வேரூன்றி அகன்று படருவதென்பது, வரலாற்றில் நிகழாத செய்கை! ஓர் இயக்கத்தை அமைத்துச் செயல் நடத்துபவர்களுக்கே அதன் உண்மை மதிப்பீடு தெரியும்!

ஏன்! **தென்மொழி** போலும் ஓரிதழ் முயற்சியைத் தமிழக வரலாற்றிலேயே எவரும் பார்த்திருக்க முடியாது! வெறுமனே, பொறுமைக்காகவும், புற அரிப்புக்காகவும் அதன்மேல் வெற்றுரை சில வீசி, மன எரிச்சலை அடக்கிக் கொள்ளலாமே தவிர, அதுபோலும் சிறப்புமிக்க ஒரு தனித்தமிழ் இயக்க வரலாற்றைச் சமைக்க எவராலும் முடியாது; முடியவே முடியாது! அத்தகைய பெருமை மிக்க அருமை முயற்சி அது! ஏறத்தாழ, கால்நூற்றாண்டுக்கால முதிர்ச்சியின் எழுச்சி உருவம் அது! நேற்றுப் பிறந்தவர்களெல்லாம், கள்ள வாணிகம் செய்தும், குள்ளக் கொள்கையை விற்றும், அரசுக்கும் செல்வர்க்கும் கால் கை பிடித்தும், முதுகு சொறிந்தும், ஆரவாரமாக, மிகமிக ஆடம்பரமாக இன்னுஞ் சொன்னால் மேனுமினுக்கித் தனமாக, அருவருப்புச் சேற்றைப் பூசி, விளம்பரமென்னும் விலைமகள் தழுவல் கொண்டு, பணத்துக்கு இதழ்கள் நடத்தும் உலகிலே-கால ஊழியிலே—கொண்ட கொள்கைக்காக ஓர் இதழையன்று—இரண்டு இதழ்களைத் தொடர்ந்து இருபத்துநான்கு ஆண்டுகள் நடத்துவதென்பது, அத்துணை எளிதன்று! எண்ணுதற்கும் அரியது! இருப்பினும் மெய்யன்பர்களின் ஆதரவு அறாத துணையால், ஒருவரி விளம்பரந் தானும் இன்றி, **தென்மொழி** ஓர் அரிய, பெரிய, பீடுமிக்க வரலாற்றைச் சமைத்துள்ளது! உலகெங்கணும் அதன் ஆக்கத்தை உணர்ந்து போற்றும் உண்மையும் நன்றியும் உடைய நெஞ்சங்கள் ஏராளம்!

இன்று அந்தத் **தென்மொழி** போலவே, அதன் பெரும் வரலாற்றுச் சமைவால் உருவாகிய உ.த.மு.க.வின் கொள்கை இதழாக, செய்தி இதழாக, மாத இதழாக அன்று—கிழமை இதழாக—இனிய, எழில் நிறைந்து, பொருள் பொலிந்த தீம்பெயருடன்—**'தமிழ்நிலம்'** தோன்றியுள்ளது.

ஆம்! **'தமிழ்நிலம்'** தோன்றித்தான் விட்டது; இனி, துலங்கி வளர வேண்டும்! ஒரு புதிய வரலாற்றை, வரலாற்றுப் புரட்சியை, புரட்சியால் விளையும் மலர்ச்சியை உருவாக்க வேண்டும்!

அப்பொழுதுதான் 'தமிழ்நிலத்'தின் தோற்றத்திற்குப் பொருள் உண்டு! அதன் எழுச்சிக்கு ஓர் உள்ளீடு உண்டு!

தமிழ்நிலம்! எண்ண எண்ண இனிக்கும் பெயர்! சொல்லச் சொல்லச் சுவைக்கும் பெயர்! ஏன், **தென்மொழி**யும் அப்படித்தானே!

மொழியும் **நில**மும் இன்றி ஓர் இன மக்கள் எழுச்சியுடனும் உரிமையுடனும் இவ்வுலகின் எந்த மூலையிலும் வாழமுடியாது; வாழவே முடியாது! வெறும் வாய்ப்பந்தல்காரர்களுக்கே, அவ்விரண்டு சொற்களும், அவர்களின் கொள்ளையடிப்புக்குப் பொருந்தாத சொற்களாகப் படும்! ஆனால், ஓர் இனத்தின் எழுச்சிமிக்க வரலாற்றை இழந்து நிற்கும், பீடு குறைந்து பெருமை குலைந்து நிற்கும், நம் தமிழ்மக்களுக்கு அவை இனிக்கும் சொற்களே! உயிரில் உணர்வுச் சிலிர்ப்பை உண்டாக்கும் பொருள் பொதிந்த சொற்களே!

அப்பப்பா, இவ்விதழைக் கொணர்வதற்குத்தான் எத்தனை அரிய முயற்சிகள்! இதன் பெயரைத் தில்லி ஆளுமையின் — அதன் வலிந்த கைகளின் இறுக்கத்தினின்று தளர்த்திப் பெறுவதற்கு எத்தனையெத்தனைப் பாடுகள்! திருச்சி மாவட்டச் செயலர் உயர்திரு. **நாரா. மகிழ்நனின்** பேருழைப்பால் பெரும் ஊக்கத்தால், மனந்தளரா முயற்சியால் பதிவுற்றது இந்தத் **தமிழ்நிலம்** என்னும் பெயர்! இதன் பின்னணி வரலாறு பீடு நிறைந்தது! பெருமை மிக்கது!

பெருமை மிக்கவர் ஆற்றுவர் ஆற்றின்
அருமை உடைய செயல்!

— என்னும் குறள் இலக்கணத்திற்கே, இலக்கியமாய்ச் சமைந்தது இத் **தமிழ்நிலம்**!

இதனைத் தமிழர் எனப்பெறுவார் அனைவரும் இருகை நீட்டி வரவேற்க வேண்டும்!

'**தென்**மொழி **ஓர் இதழன்று; இயக்கம்**! — என்று அதன் தொடக்க இதழில் எழுதினோம்! அது மெய்யானது!

இக்காலும் சொல்லுகின்றோம்! எழுதுகின்றோம்!! '**தமிழ்நிலம்**' **ஓர் இயக்கமன்று! ஒரு வாழ்க்கை! வாழ்க்கை உரிமையின் வித்து!** இது முளை விட்டுக் கிளை விட்டு வளர்ந்து, பூத்துக் காய்த்துக் கனியை நல்குதல் வேண்டும்!

இதற்குப் பல்லாயிரக்கணக்கில் உறுப்பினர்கள் சேரவேண்டும்; சேர்க்கப் பெறுதல் வேண்டும்!

இலக்கக் கணக்கில் அச்சாகிப் படர்ந்து பரவுதல் வேண்டும்! பரப்பப்பெறுதல் வேண்டும்!

இதன் ஒவ்வோரடியும் தமிழரின் இன முன்னேற்றத்திற்குக் கட்டியங் கூறி நிற்கும்!

ஒவ்வோரிதழும், தமிழ்நில உரிமைக்கு ஒரு கைப்பிடி எருவாக உதவுதல் வேண்டும்!

இதன் உண்மை எழுச்சிக்குத் தென்மொழி அன்பர்களின் முழு உழைப்பும் பயன்பெறுதல் வேண்டும்! அனைவரும் இதன் உண்மை உழைப்பில் பங்கு பெறுதல் வேண்டும்!

இஃது ஓர் எளிய முயற்சியன்று! அரிய முயற்சி! அரிதினும் அரிய பாடு! **இதனை எல்லாரும் கட்டிக் காத்துக் கொள்ளுதல் வேண்டும்!**

அனைவரும் இதற்கு உறுப்பினராகி நிற்றல் வேண்டும் உண்மைத் தமிழர் அனைவரையும் இதன் பாங்கில் கொணர்ந்து நிறுத்துதல் வேண்டும்!

இஃது உ. த. மு. கழகத்திற்குச் சொந்தமான இதழ்! இதன் வளர்ச்சி ஒவ்வொன்றிலும், அன்பர்கள் தம் பங்கை—அது சிறிய பங்காயினும்—தவறாமல், தவிராமல் இன்றே பதித்திடல் வேண்டும்!

நன்கொடைகளை வாரி வழங்குதல் வேண்டும்!

இதற்கென்று ஒரு தனி அச்சகத்தையே நிறுவுதல் வேண்டும்! அதற்குக் கோடிக்கணக்கில் பணம் தேவைப்படும்! எளிதன்று தமிழின உரிமை மேம்பாடு!

அனைத்தும் அன்பர்களின் பெருமுயற்சியால் வந்து குவிந்திடல் வேண்டும்!

நன்கொடைப் பட்டியல் முதல் இதழிலிருந்தே தொடங்குகிறது! உங்கள் பெயரும் உள்ளமும் அதில் பளிச்சிடல் வேண்டும்! ஈட்டத்தை, உங்கள் கைகளால் வாரி வீசுங்கள்! இயலாதவர்கள் அள்ளிப் போடுங்கள்! அதுவும் இயலாதவர்கள் கிள்ளிக் கொடுங்கள்! அதையும் செய்ய முடியாதவர்கள் வாங்கிப் படியுங்கள்! அதையும் ஆற்ற வாய்ப்பற்றவர்கள் வாயார வாழ்த்துங்கள்! நெஞ்சார வாழ்த்த நினையுங்கள்!

'**தமிழ்நிலம்**' உங்கள் இதழ்! உங்கள் சொத்து! உங்களுக்கு உரிமை வாங்கித்தரும் படைக்கலம்!

உங்கள் கருத்துகள் அனைத்தும் இதில், இனி, இடம்பெறும்!

தென்மொழி, இனி, எப்பொழுதும் போல் தூய இலக்கிய வளமும் மொழி நலமும் கருதும் இதழாக, வெளிவரும்! நின்றுபோன நம்முடைய அனைத்துப் படைப்புகளும் அதில் இனித தொடர்ந்து இடம் பெறும்.

வாழ்க உங்கள் **தமிழ்நிலம்**! வளர்க உங்கள் தென்மொழி!



தளபதி (CAPTAIN) அசரியா மறைவு

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித்திட்டத்தில் அதன் பதிப் பாண்மை எழுத்துறவாளர் (Editor and Correspontent) ஆகப் பாவாணர் அவர்களால் அமர்த்தப் பெற்றவரும், பாவாணர் மறைவிற்குப் பின், பொறுப்பு இயக்குநர் மதிவாணனால் அப் பதவியில் நீட்டிக்கப்பெறாது விலக்கப்பட்டவரும், வரலாறு, மற்றும் இலக்கிய ஆராய்ச்சியில் வல்லுநருமான பேராசிரியர் தளபதி **அசரியா** அவர்கள் 2013 கன்னி 3 ஞாயிறு (19-9-82) அன்று இயற்கையெய்தியமையறிந்து பெரிதும் வருந்துகின்றோம்.

நெல்லை மாவட்டம் ஆதித்தப் பேரேரி (ஆதிச்சப்பேரி) என்னும் ஊரில் திரு. வேதமணி அவர்களின் நன்மகனாக 1907-ஆம் ஆண்டில் பிறந்த அசரியா ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். பள்ளி, கல்லூரிகளில் சில காலம் கல்விப் பணியாற்றியதோடு, வேலைவாய்ப்புத் துறையில் உதவி இயக்குநராகவும் பணியாற்றிய இவர் படைத்துறையில் பன்னீராண்டுகள் பணியாற்றித் தளபதி (Coptain) ஆக உயர்ந்தார். 1958-இல் வேலூர் மருத்துவமனைக் கண்காணிப்பாளராக வந்தமர்ந்தார். ஓய்வு பெற்றபின் சென்னைக்குக் குடிபெயர்ந்தார்.

1958-இல் பாவாணரை அறிந்து அவருடன் தொடர்பு கொண்ட அசரியா வேலூரிலும் சென்னையிலும் இறுதிவரை ஒல்லும் வகையான் பாவாணருக்குத் துணை நின்றமை குறிப்பிடத் தக்கது.

திருக்குறள், கழக இலக்கியங்கள், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடும் ஆராய்ச்சியும் வாய்ந்த அசரியா அவர்கள் அவற்றில் பெரும்பாலானவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 'ஐயை'யையும் அவர் மொழிபெயர்த்துள்ளார்.

காரவேலன் கல்வெட்டுத் தொடர்பாக விரிவான ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கழகக் காலத்தொன்மை பற்றிய பல அரிய உண்மைகளைக் கண்டார். கண்டப் பெயர்ச்சிக் கொள்கைப்படி குமரிக் கண்ட உண்மையை அறிவியலுக்குப் பொருந்துமாறு ஆராய்ச்சி செய்து வந்தார்.

அசரியாவின் துணைவியார் திருவாட்டி பிளோரா அம்மையார் ஆவார். இவர்கட்கு மகள் ஒருவரும், ஆண்மக்கள் இருவரும் உள்ளனர். நுண்ணறிவும் ஆராய்ச்சியுணர்வும் சலியா உழைப்பும் வாய்ந்த அசரியா அவர்களின் மறைவு குறித்துப் பெரிதும் வருந்துவதோடு அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கும் பிறர்க்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். — **இறை.**

வேறென்ன செல்வது ?

1) தமிழ் நாட்டில் உள்ள 2 இலக்கம் ஏழை முதியோருக்கு வரும் பொங்கல் (சனவரி 14) முதல், இலவய ஊட்டவுணவு (சத்துணவு) வழங்கப்படும். இதற்காகப் புதுவரி எதையும் போட மாட்டோம். — **முதலமைச்சர்.**

ஏழையின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கே முதலில் திட்டமிட வேண்டும். ஏழையை ஏழையாகவே வைத்திருப்பதற்கன்றோ இத்திட்டம் பயன்படும்? ஈகைச் செல்வர் (தர்மகர்த்தா) திட்டம் பொதுவுடைமைக்கு நேர் எதிரானதே !

2) இந்திரா கட்சி, குண்டர்களும் கடத்தல் காரர்களும் நிறைந்த கட்சி ! — **மேனகாகாந்தி.**

அத்தகையவர்கள் இல்லாத கட்சி எது ?!

3) ○ மதுராந்தகத்தில் காவல் துறை அதிகாரி வீட்டில் திருட்டு.
○ காரைக்கால் நடுவர் வீட்டில் திருட்டு !
○ சட்டமன்ற விடுதியில் 20 ஆயிரம் உருபா பொருள்கள் திருட்டு.
○ தில்லி, காவல் துறைத் தலைமையகத்தில் திருட்டு. — **செய்திகள்.**

திருடப்பட வேண்டிய அளவு சொத்துகள் எங்குச் சேர்ந்திருக்கின்றன என்பது திருடர்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கின்றது !

4) சரக்குந்துகளில் ஆட்களை ஏற்றக் கூடாது என்று சட்டம் போட்டவர் எம். சி. ஆர். தாம். இன்று அதை மீறுபவரும் அவர் தாம் ! — **கருணாநிதி** குறை.

இதற்காகத்தான் எங்கள் ஆட்சியில் அதுபோல் ஒரு சட்டத்தை நாங்கள் போடாமல் இருந்தோம் !

5) தேர்தலில் ஒரு சார்பாக நடக்க வேண்டாம் என்று காவல் துறைக்குக் கட்டளை பிறப்பிக்கின்றேன். — கலாநிதியிடம் ஆளுநர் **குரானா** உறுதி !

தாம் வெல்ல முடியாது என்ற இடத்தில் மற்ற கட்சிகளைப் பொறுத்த வரையில் எங்கள் தலைவி இந்திராகாந்தி கடைப்பிடிக்கும் கொள்கை(!)யே அது தான் !

6) வழக்கறிஞர்களிடம் காவல் துறையினர் மதிப்புக் குறைவாக நடந்து கொள்ளும் முறையைக் கண்டிக்கும் வகையில், வழக்குமன்றங்களை ஒரு நாள் புறக்கணிப்புச் செய்ய வேண்டும் என்று வழக்கறிஞர் கழகம் விடுத்திருந்த

காவல் துறையினர் வேறு யாரிடந்தாம் மதிப்பாக நடந்து கொள்கின்றனர் என்பதை வழக்கறிஞர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் !

வேண்டுகோளுக்கினங்க, ஆந்திரா வில் அனைத்து வழக்கறிஞர்களும் வழக்குமன்றங்களை ஒருநாள் புறக் கணித்தனர். — **செய்தி.**

7) தொடர் வண்டிகளில் கொள்ளையடிப்பவர்களைக் காவலர் கள் மாற்றுக் கோலத்தில் (வேடத் தில்)சென்று பிடித்தனர்.-- **செய்தி.**

மாற்றுக் கோலத்தைக் கலைத்த பின் யார் காவலர்கள், யார் கொள்ளையர் என்று தெரி வது கடினமாயிருந்திருக்குமே !

8) சோலார் பேட்டைத் தொடர் வண்டி நிலைய **அதிகாரி** ஒரு பெண்ணிடம் தவறாக நடந்ததாகத் தளைப் படுத்தப் பட்டுள்ளார். — **செய்தி.**

இந் நாட்டில் அதிகாரங்கள் இது போலும் நடவடிக்கை களுக்குத் தாமே பெரும் பாலும் பயன் படுத்தப் படுகின்றன !

9) தி.மு.க. தலைவர் கருணாநிதி அரசியலில் இருக்கும் வரை தமிழகம் உருப்படாது.— புதுவை இந்திரா பேராய அமைச்சர் சவரி ராசன் பேச்சு.

ஏன்..! இந்திரா காந்தி அரசி யலில் இருக்கும்போது **இந்தியா** உருப்பட வேண்டியது தானே ! தமிழகம் என்ன அதற்குள் அடங்காததா ?

10) ஏழாண்டுக்காலம் முதல் வாக இருந்து தமிழ் நாட்டைச் சுரண்டிய கருணாநிதிக் கட்சிக்கு ஒப்போலை போடக் கூடாது. — அமைச்சர். **குழந்தைவேலு.**

அத்தனை **ஆண்டுக்காலம்** நாங்களும் சுரண்டுவதற்கு எங்க ளுக்கும் பொது மக்கள் வாய்ப் பளிக்க வேண்டும் !

11) 365 நாட்களில் கருணாநிதி 280 போராட்டங்களை நடத்தி ஆட்சிக்குத் தொல்லை கொடுத்து வருகிறார். இவ்வளவு போராட்டங் களையும் சந்தித்து நாங்கள் **மக்க ளுக்கு நன்மைகள்** செய்து வரு கிறோம். — கொடைக்கானல் கூட்டத்தில் **முதல்வர்** பேச்சு.

மக்களுக்கு நன்மைகளா ? எந்த(க் கட்சி) மக்களுக்கு?

12) மாயவரத்தை மயிலாடுதுறை என்று மாற்றியதையடுத்துச் சிதம் பரம்,தில்லை என்றும் விருத்தாசலம் திருமுதுகுன்றம் என்றும் வேதா ரண்யம், திருமறைக்காடு என்றும் மாற்றியமைக்கப்படும் ! -- அமைச்சர். **சோமசுந்தரம்.**

அத்துடன் சோமசுந்தரத்தை நிலவழகன் என்றும், இராமச் சந்திரனை அழகு மதியன் என்றும், இன்னும் பிற பிற ... மாற்றினால் நல்லதாயிற்றே !

13) 'அரசியல் ஒரு சாய்க்கடை. எனவே தேர்தலில் போட்டியிட மாட்டேன்' என்று முன்னர் அறிவித்த, நாராயணசாமி, இப்பொழுது **'உழவர் உழைப்பாளர் கட்சி'** யை அமைத்துத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

— தமிழக உழவர் (விவசாயிகள்) சங்கம் கண்டன அறிக்கை.

'என்ன செய்வது ? அந்தச் சாய்க்கடைதான் தெருவெல்லாம் பாய்கிறதே! அதில் குளித்து முழுகாமல் இழுக்க முடியுமா'? — என்று நாராயணசாமி சொல்லலாம் !

14) காஞ்சி காமகோடி சுவாமிகள் அனைவருக்கும் குருவாகவும், **இறைவனாகவும்**, ஆன்மிக வழி காட்டியாகவும் விளங்கி வருகிறார்கள். — சின்னப் பெரியவாள் சயேந்திர சரசுவதி.

இந்த இருபதாம் நூற்றாண்டில இதைவிட ஏமாற்றுத் தனமான பேச்சு இருக்க முடியாது !

15) இந்தியா இந்தியாவாகவே இருக்க வேண்டுமென்றால் முதலில் சமசுக்கிருத மொழியைப் புத்துணர்வு பெற்றதாகச் செய்ய வேண்டும். — சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சாந்தப்பா.

முதலில் கெட்டிக்காரத்தனமாகச் சாந்தப்பா தம் பதவி நிலைப்புக்கு நல்ல அடிப்படையைப் போட்டுக் கொண்டு விட்டார் !

உ. த. மு. க. சென்னை, செங்கழுநீர்ப் பட்டு அமைப்புக் கூட்டம்

சென்னை, செங்கழுநீர்ப்பட்டு ஆகிய மாவட்டங்களின் பதவியர்த்தக் கூட்டம், கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தலைமையில், வரும் 31-10-82-ஆம் நாள், சென்னை, தேவநேயப் பாவாணர் நடுவண் நூலகத்தில், கருத்தரங்க அறையில், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெறவுள்ளது. அவ் வமயம் மேற்குறித்த மாவட்டங்களில் உள்ள தென்மொழி அன்பர்களும், கழகத்தில் ஈடுபாடு கொள்ள விரும்பும் தமிழன்பர்களும், ஆர்வலர்களும், நேரில் வந்து கலந்துரையாடலிலும், பொறுப்பமர்த்தத் தேர்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

சென்னை-5
10-10 82.

தென்மொழி ப. துரையரசன்
கழக அமைப்புச் செயலாளர்

உ. த. மு. க. செய்திகள்

நெல்லை (வடக்கு) மாவட்டம்—தென்காசி நிகழ்ச்சி

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

பிற்பகல் 4 மணியளவில் தொடங்கிய அமைப்பு நிகழ்ச்சி 7-30 மணியளவில் சிறப்புற நிறைவேறியது. வந்திருந்த அன்பர்களைக் கொண்டு முழு மாவட்ட அமைப்பையும் நிறைவு செய்ய இயலாமற்போயினும், சில வட்ட, மாவட்டப் பொறுப்புகளை மட்டும் நிறைவு செய்து கொண்டு பாவலரேறும் பிறரும், சிவகாசி செல்ல விருந்தார்கள். எனவே இரவு உணவுக்குப் பின், அனைவரையும், மாவட்ட அமைப்பாளர் கரிகாலன் அவர்கள், கடையநல்லூரில் உள்ள தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, இரவு தங்கச் செய்து, மறுநாள் (30-7-82) காலை, உ.த.மு.க. நாள் காட்டிப் பணித் தொடர்பாகச் சிவகாசிக்கு அனுப்பி வைத்தார். கரிகாலன் துணைவியார், அனைவருடைய சிற்றுண்டியையும் பொட்டலமாகக் கட்டி அன்புடன் கொடுத்திருந்தார்கள். அப் பொட்டலங்கள் சிவகாசியில் காலைச் சிற்றுண்டிக்குப் பயன்படுத்திக் கொள்ளப் பட்டன.

சிவகாசியில் நாள்காட்டிப் பணி

முன்னரே தெரிவித்திருந்தபடி, திருச்சி உ.த.மு.க. மாவட்டச் செயலர் திரு. நாரா. மகிழ்நன், சிவகாசியில் பாவலரேறு, நெய்வேலி சுப. திருமாறன், ச. சின்னத்துரை, அமைப்புச் செயலர் ப. துரையரசன் ஆகியோருடன் வந்து இணைந்து கொண்டார். சிவகாசியில் காலை 10 மணி முதல், பிற்பகல்வரை மகிழ்நன், திருமாறன், சின்னத்துரை, துரையரசன் ஆகியோர் இரண்டு அணிகளாகப் பிரிந்து, நாள்காட்டி அச்சீட்டுத் தொடர்பாகப் பல அச்சகங்களுக்குச் சென்று உசாவியும், வேலைக்கான மதிப்பீட்டுப் புள்ளி விளத்தங்களைப் பெற்றும் வந்தனர். இறுதியில் பாவலரேறும் மகிழ்நனும் சிவகாசியிலேயே மிகச்சிறந்த நுண்ணியக்க அச்சகத்தையும் போய்ப் பார்த்துப் புள்ளிகளைப் பெற்று வந்தனர். இது பற்றி மேற்கொண்டு சென்னை திரும்பி ஆய்வு செய்து முடிவெடுக்கப் பெறும் என்று முதல்வர் கூறினர். அதனையடுத்து அன்று இரவு உணவுக்குப்பின் மகிழ்நனும் திருமாறனும் சின்னத்துரையும் ஊர்களுக்குத் திரும்பினர். முதல்வரும் அமைப்புச் செயலரும் அன்று

இரவு சிவகாசியில் தங்கி மறுநாள் காலை 7 மணியளவில் மேற்கு முகவை மாவட்ட அமைப்பு நிகழ்ச்சிக்காக விருதுநகர் புறப் பட்டனர்.

முகவை (மேற்கு) மாவட்ட அமைப்பு நிகழ்ச்சி

ஏற்கனவே விருதுநகரில், முகவை மேற்கு மாவட்ட அமைப்பு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு எழுதியிருந்தபடி, நீண்ட நாளைய தென்மொழி அன்பரும், மிகச்சிறந்த பொதுத்தொண்டரும், பகுத்தறிவ உணர்வாளரும், சிறந்த தமிழ்ப்புலவரும் ஆகிய திரு. **சாலமோன்இராசு** அவர்கள், அங்குள்ள பொதுப்பணித்துறை வழிப்போக்கர் விடுதியை நிகழ்ச்சிக்கென முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தார். தூய்மையான அன்புள்ளம் கொண்ட திரு. சால மோன்இராசு அவாகள் முதல்வரும் அன்பாகளும் சிவகாசியிலிருந்து காலையில் வந்துசேரும் நேரம் சரியாகத் தெரியாமல், உந்து வண்டி நிலையத்திற்கும் வழிப்போக்கர் விடுதிக்கும் இரண்டு மூன்று முறை நடைபோட்டு அலைந்திருக்கின்றார். இறுதியில் அவாகள் வழிப் போக்கர் விடுதிக்குத் தாமாகப் போய்ச் சேர்ந்த பின்னர், வியப்பும் பரபரப்பும் அடைந்து மகிழ்ச்சியால் திக்குமுக்காடிப் போனார்.

விருதுநகர் நிகழ்ச்சி பிற்பகல் 3 மணியளவில் தொடங்கி இரவு 8 மணி வரையில் நடந்தது. ஆர்வமுள்ள அன்பர்கள், நெடு நாளைய தென்மொழித் தொடர்பாளர்கள். தமிழாசிரியர்கள், உள் ளூர்த் தலைவர்கள் முதலிய பலரும் வந்திருந்தனர். வந்திருந்தவர் களில் முகாமையாகக் குறிக்கப் பெற வேண்டியவர்கள் திரு. க. திருமாறன். (தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. க. அன்பழகன் அவர்களின் தம்பி), திரு. அ. வேங்கடாசலபதி. (மாவட்ட தி.க. துணைத்தலைவர்) முதலியோர் ஆவர். முதல்வர் மாவட்ட அமைப் பாளராகவும், திரு. சாலமகன் அரசு (சாலமோன்ராசு) அவர்கள் செயலராகவும், தி.அ. வேங்கடாசலபதி பொருளராகவும் அமர்த்தம் பெற்றனர். வேறு சிலர் வட்ட அளவில் அமர்த்தப் பெற்றனர். பொருளாளர் அங்கேயே அப்பொழுதே தாம் தகுதியான பொருளர் என்பதை மெய்ப்பிக்கலானார். வந்திருந்த ஐந்து பேர்களிடம் தென்மொழிக்கும் தமிழ்ச்சிட்டுக்குமாக உருபா நூற்று ஐந்தை உறுப்பினர் கட்டணமாகத் தண்டிவிட்டார்.

நிகழ்ச்சி 8 மணியளவில் முடிவுற்றதும், அன்பர்கள் அனைவரும் பாவலரேறு அவர்களுக்கும் துரையரசன் அவர்களுக்கும் சிற்றுண்டி வாங்கி அருத்தித் தொடர்வண்டி நிலையம்வரை வந்து வழியனுப்பி வைத்தனர். விருதுநகர் நிகழ்ச்சியுடன் தென்மாவட்டங்களின் பத்து நாட்கள் சுற்றுச் செலவை முடித்துக் கொண்டு, கழக முதல்வர் பாவலரேறு அவர்களும், அமைப்புச் செயலர் ப. துரையரசன் அவர் களும் தத்தம் இருப்பிடம் திரும்பினர். இவ்வகையில் கழக அமர்த்

தத்திற்கு ஒத்துழைப்பு நல்கிய அன்புள்ளங்கள் அனைத்துக்கும் கழகத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றியும் வாழ்த்தும் உரிய வாகுக!

நெய்வேலி அமர்த்தக் கூட்டம்

கடந்த 3-9-82 அன்று காலை 10 மணியளவில் நெய்வேலி நகரியத்தில் உள்ள சுற்றுலா விடுதியில், நெய்வேலி அமர்த்த நிகழ்ச்சி, கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்பர்கள் காலை முதல் கழக முதல்வரை வர்களைக் கண்டு கலந்து பேசி நிகழ்ச்சிக்கு உறுதுணையாயிருந்தனர். முதல்வர் அவர்களுடன், புதுவை மாவட்ட உ.த.மு.க. அமைப்பாள ரும், சொல்லாய்வறிஞரும் ஆகிய ப. **அருளி** அவர்களும் பங்கு கொண்டார்கள். விழுப்புரத்திலிருந்து, தென்னார்க்காடு வடக்கு மாவட்ட அமைப்பாளர், **விழுப்பரையன்** அவர்களும், விழுப்புரம் வட்டச் செயலர் **அ. நக்கீரன்** அவர்களும், தலைமைக்கழக, அறிவியல் துறைச் செயலர் **ஆ. தெ. தமிழ்நம்பி** அவர்களும், தென்னார்க்காடு (தெற்கு) மாவட்டப் பொருளர் புலவர். **இரெ. தமிழ்வேந்தன்எழில்** அவர்களும் பங்கு கொண்டனர். நெய்வேலி அமர்த்த நிகழ்ச்சி அமைவதற்கு, தலைமைக்கழக, முதன்மைக்குழு உறுப்பினர் தென் மொழி **கூ.ப. திருமாறன்** அவர்களும், தென்னார்க்காடு (வடக்கு) மாவட் டப் பொருளர் திரு. **ச. சின்னத்துரையுமே** மிகவும் துணையாக நின்றனர். மாலையில் நடந்த அமைப்பு நிகழ்ச்சிக்குத் தென்னார்க்காடு மாவட்ட திராவிடர் கழகச் செயலர் திரு. **இரா. கனகசபாபதி** அவர் களும் வந்திருந்து ஊக்கம் கொடுத்தார். இந்த அமைப்பு நிகழ்ச்சி யில், தென்மொழி 1959-இல் தொடக்கக் காலத்தில், அது நெல்லிக் குப்பத்தில் நடந்த பொழுதில், அதற்கு முழு அளவிலும் துணையாசிரி யராகவும், எழுத்தராகவும் பொறுப்பேற்றிருந்து, இராப் பகல் எந் நேரமும் பாவலரேறு அவர்களுக்கு உறுதுணையாக விருந்த புலவர் **ஆ. முகிலன்** (தூசை) (தமிழாசிரியர் அ.உ. பள்ளி, பாளையங் கோட்டை) அவர்களும், அக்கால் ஆசிரியர்க்கு அகத்தும் புறத்தும் பெருந்துணையாகவிருந்து, ஆசிரியரின் குடும்ப நலன்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த உழுவலன்பர், வடக்குப் பாளையம், ஆசிரியர் **தா. அல்போன்சு லிகோரி** அவர்களும் எதிர்பாராமல், ஏறக்குறைய இருபதாண்டுகளுக்குப்பின், வந்து பங்கு கொண்டது குறிப்பிடத் தக்கது. இருவரும் வந்து, ஆசிரியரைக்கண்டு ஓர் **அரைமணி** நேரம் உணர்வு வயப்பட்டுக் கண்ணீர் சொரிந்து, வாய்பேச முடியா மல் நாத் தழுதழுத்து நின்ற காட்சி, அங்கிருந்த அனைவருக்கும் பெரிதும் வியப்பையும் விருப்பையும் தந்தது. அமைப்பு நிகழ்ச்சி யோடு ஒட்டி இரவு 8 மணியளவில் நடந்த சிறு உரை நிகழ்ச்சியில், திருவாளர்கள் ச. சின்னத்துரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பண்டாரகர்ப் பட்டத்திற்குரிய ஆய்வு மாணவராகவிருக்கும் கு. இரா

சேந்திரன், க.மு. புலவர் முகிலன், புலவர் தமிழ்வேந்தன்எழில், ப. அருளி, சுப. திருமாறன் ஆகியோர் அனைவரும் தங்கள் உணர் வுள்ளங்களை உரையில் வரைந்து காட்டினர். இறுதியில் நிகழ்த்திய பாவலரேறு அவர்களின் உணர்ச்சியும் அறிவும் கலந்த உரை அனை வரையும் மெய்ம்மறக்கச் செய்தது.

அன்றைய நாள் காலைச் சிற்றுண்டிப் பொறுப்பை ச. சின்னத் துரை குடும்பமும், பகல் உணவுப் பொறுப்பை சுப. திருமாறன் குடும்பமும் ஏற்றுக் கொண்டு, அன்பு காட்டினர். அனைவருக்கும் ஆன இரவுணவுப் பொறுப்பை நெய்வேலி உ.த.மு.க. ஏற்றுக் கொண்டது. இவ்வகையிலும், பிற நிலையிலும் நெய்வேலி நகரியத் திலும் சுற்றுப் புறத்திலும் கழகம் அமைய ஒத்துழைத்த அன்பர்கள் அனைவர்க்கும் தலைமையகம் நன்றி செலுத்துகிறது.

உ.த.மு.க. கோவை மாவட்டக் கிளைத் தொடக்க விழா:

கோவைச் சன்மார்க்கச் சங்கக் கட்டடத்தில் தி.பி.உம்கஉ மடங் கல், உம் (5-9-82) ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு உ. த. மு. கழகக் கோவை மாவட்டக் கிளையின் தொடக்கவிழா தொடங்கியது. திரு. துரைமடங்கன் மாவட்ட அமைப்பாளரான திரு. கு.வெ.கி. ஆசான் க.மு.,ச.இ., அவர்களைத் தலைவராக முன் மொழிந்தார். மாவட்டச் செயலர் கி. இளஞ்சேரல்முதுபாண்டியன் அதை வழி மொழிந்தார்.

மாவட்டச் செயலர் கி. இளஞ்சேரல்முதுபாண்டியன் அனைவரை யும் வரவேற்றுப் பேசினார். தலைவர் தம் முன்னுரையில் உ.த.மு. கழகம் தமிழனின் அடிமைநிலை நீக்க, உலகத் தமிழரிடை விழிப் புணர்வு ஏற்படுத்துவதும், திராவிடர் கழகம் போன்று அரசியற் சார்பற்று இயங்குவதும், தமிழர் எந்த மதத்திலல்லது கட்சியிலி ருந்தாலும் ஒன்றுபடவேண்டுவதும், ஆகிய ஓர் ஒற்றுமை இயக்கம் என்றும், அது காலக் கட்டாயத் தேவையான ஓர் இயக்கமுமாகு மென்றும் விளக்கினார்கள்.

சொல்வாய்வறிஞர். ப. அருளி, வணி.இ.,ச.இ. கழகக்கொடியை ஏற்றி வைத்ததுடன், அரியநேதோர் உரையுமாற்றினார். 'நாட்டைச் சாய்க்க மொழியைச் சாய்' என்று ஆரியர் தமிழரை அடிமைகொண் டதை விளக்கினார்.

திரு. செந்தலைக்கவுதமன், க.மு.,கல்.இ. மொழிநிலை பற்றியும், திரு. இரணியன், க.மு., தொழில்நிலை பற்றியும், தென்மொழி ப. துரையரசன், க.இ. தமிழன்நிலை பற்றியும், தென்மொழி க. தமிழப்பன் பண்பாட்டுநிலை பற்றியும், திரு. ப. பத்மநாபன், க.மு., ச.இ. கோயில் வழிபாட்டு நிலைபற்றியும், கு.சா. அப்பாவு, க.மு.,

கல்.இ. குமுகாயநிலை பற்றியும், தென்மொழி, ந. முத்துக்குமரன், அறி.இ அரசியல்நிலை பற்றியும், புலவர். கி. குப்புராசு ஆசிரியர்-மாணவர் நிலை பற்றியும், புலவர் சி. இராசியண்ணன் பாட்டாளிகளின் நிலை பற்றியும் என, தமிழகத்தின் இன்றைய நிலைமைகளைப் பற்றிய கருத்துரைகளை வழங்கினார்கள். அவர்களின் கருத்துரைகளில் மொழி, இன அடிப்படையில் தமிழர் ஒன்றுபட்டுப் பெரியாரும் அண்ணாவும் வளர்த்துச் சென்ற சாதியற்ற குமுகாயம் உருவாகப் பாடுபட வேண்டும் என்னுங் கருத்து செறிந்து நின்றது.

திருப்பூர்க்கல்லூரி—பள்ளி மாணவர்களால் திருப்பூரிலிருந்து தொடர் ஓட்டமாக ஏந்திவரப்பட்ட 'தமிழ்ச்சுடர்' மாலை 4-30 மணியளவில் கழகமுதலவர் பாவலரேறு அவர்களிடம் அளிக்கப்பட்டது. பின்பு, மேனாள் ச.ம.உ. திரு. மு. இராமநாதன் (தி.மு.க.), புலவர். மருதவாணனார் (பகுத்தறிவாளர் கழகம்), திரு கு. இராமகிருட்டினன் (மாநில இளைஞரணிச் செயலர், தி க.), திரு, கு.ச. ஆனந்தன் வணி. இ ,ச.இ (திருக்குறள் பேரவை, கோபி), பேரா இல.செ. கந்தசாமி, க,மு. (வேளாண்மைப் பல்கலை., கோவை), என்.எசு. பழனிச்சாமி, க.மு. (இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி), திரு.விடுதலை விரும்பி (தி.மு.க) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவின் நிறைவு நிகழ்ச்சியாகக் கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் சிறப்புரை யாற்றினார்கள். அவர்கள் தம்முரையில் உ.த.மு. க. கொள்கைகளை விளக்கியும், எழுப்பப்பட்ட ஐயப்பாடுகளைத் தெளிவித்தும் பேசினார்கள். திரவிட இயக்கப் பள்ளியிற் பயின்றவர்கள் மொழி, இனப் பாதையில் செல்லும் அணியின் பெயரே உ.த.மு. கழகம் என்றார்கள். வள்ளுவர் வழிநின்று தமிழின உரிமை மீட்புப்பணியினைச் செய்ய வேண்டிய கடமையைப் பற்றி விரிவாக உரையாற்றினார்கள்.

மாவட்டப் பொருளர் திரு. மா. ஆறுமுகம் நன்றியுரையுடன் விழா நிகழ்ச்சிகள் இரவு 10-15 மணியளவில் இனிதே நிறைவுற்றன.

கோவை மாவட்ட உ.த.மு.க. தொடக்க விழா சிறப்புற அமைவதற்கு, மாவட்ட அமைப்பாளர் திரு கு.வே.கி ஆசான் அவர்கள் அனைத்து நிலைகளிலும் அன்பர்களுடன் பெருந்துணையாக நின்று இயங்கியது பெருங்கரணியமாகும். இயல்பாகவே அவருக்குள்ள தனிப்பயிற்சிக் கல்லூரியின் பொறுப்புச் சுமையுடன் இதனையும் சேர்த்துச் செய்தது பெரிதும் பாராட்டுக் குரியதாகும். அவர்களுடன் இவ்வகையில் பெரிதுந் துணையாக நின்று இயங்கிய மாவட்டச் செயலர் திரு. இளஞ்சேரல்முதுபாண்டியன் அவர்களையும், மாவட்டப் பொருளர் திரு. மா. ஆறுமுகம், அவர்களையும் தலைமைக்கழக முதன்மைக்குழு உறுப்பினர் தென்மொழி ந. முத்துக்குமரன் அவர்களையும், தலைமைக்கழக அமைப்புச்செயலர் தென்மொழி ப. துரையரசன் அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் மிகையாகாது.

அத்துடன், தலைவர் அவர்களுக்கு எந்நேரமும் உடனிருந்து அனைத்து நிலைகளிலும் ஒத்துழைப்பு நல்கிய கோவை வட்டப் பொருளர் ஆலாந்துறை ந.இரா. தமிழவேள் அவர்களும் பெரிதும் பாராட்டுக் குரியராவர். மற்றும் இரவு நேரங்களில் சுவரொட்டி ஒட்டுதல், பதாகைகள், கொடிகள் கட்டுதல், முதலிய பணிகளிலும், அறிக்கை கள் கொடுத்தல், தொகை தண்டுதல் முதலிய பொதுத்தொண்டுகளி லும் சலியாதும் சளைக்காதும் பாடாற்றிய திருவாளர்கள், மின்பாறை தனக்கோடி, வாசு, திருமேனி, செந்தில் குமார் (ஆசான் மக்கள்), தமிழ்மணி, தங்கவேல் (சிங்கா நல்லூர் தோழர்கள்), செந்திலின் நண்பர் ஒருவர் (பெயர் தெரியவில்லை) முதலிய அனைத்துத் தமிழ் உள்ளங்களும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியராவர். அவர்கள அனைவர்க்கும் தலைமைக் கழகச் சார்பில் வாழ்த்துகள் உரியவாகுக.

இனி, திருப்பூரிலிருந்து தொடர் ஓட்டமாக வந்து, பாவலரேறு அவர்களிடம் இனவிருள் நீக்கும் ஒளிச்சுடரைத் தந்த மாணவத் தமிழ் மறவர்களாகிய திருவாளர்கள் இரா.சி. சண்முகம் (க.இ), (தலைவர்), த. செயக்குமார் (அறி.இ), க. சந்திரசேகரன் (அறி.இ), நா. கோபிநாதன் (க.இ.), சு. இரமேசு, (க.இ.), சார்லசு பிரபாகரன் (அறி.இ.), பரமேசுவரன் (அறி.இ.), எல்லாசி (க.இ), கு. நா. கோபாலன் (அறி.இ), மா. எட்வர்டு (க.இ) ஆகியோரும்; சுடர்க்குழு அமைப்பாளர்களாகிய திருவாளர்கள் க. புகழேந்தி (இராபர்ட்) (க.மு.), ப. மருள் நீக்கி (வெங்கிடுபதி) க.இ. ஆகியோரும்; அவர் களுடன் மிதிவண்டியில் வந்து துணை நின்ற திருவாளர்கள் நாக ராசு, பொன்னுசாமி, தென்மொழி க. தமிழப்பன், க. மனோகரன், த. ஏசையன் ஆகியோரும், இந்நிகழ்ச்சியைத் திருப்பூரில் தொடக்கி வைத்தவரும், சுடர் ஏந்தி வந்தவர்களின் செலவுகளுக்கு என நன் கொடை தண்டி உதவியவரும், திருப்பூர், நஞ்சப்பா மேனிலைப் பள்ளி ஆசிரியரும், நெடுநாளைய தென்மொழி அன்பரும், மதுரை விடுதலை மாநாட்டின் பொழுது ஆசிரியருடன் காவல் நிலையத்தில் தளைப்பட்டி ருந்த வரும் ஆகிய திரு. துரையரசு வணி.மு; கல்.இ. அவர்களும், பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியவராவார்கள். அவர்கள் அனை வரையும் தலைமைக் கழகம் நிறைந்த நெஞ்சிடன் வாழ்த்துகிறது.

கோவை மாவட்ட உ.த.மு.க. தொடக்க விழா நிகழ்ச்சியின் இறுதியில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்கள் வருமாறு :

1. ஈழத் தமிழர் சிக்கலில் இந்திய அரசும் தமிழ்நாட்டு அரசும் தலையிட்டு, அவர்கள் படும் இன்னல்களை நீக்கக் குரல் கொடுத்து, அவர்களின் சிக்கலுக்குத் தீர்வுகாண வேண்டும் என இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. அனைத்து நிலைகளிலும் இந்தியை, இந்தி பேசாத மாநில மக்கள் மீது திணிப்பதைக் கைவிட்டு அனைத்துத் தேசிய மொழிக

ளுக்கும் சம உரிமை தரப்பட வேண்டுமென்றும், இது தொடர்பாகத் தற்போது 'தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்' என்ற பெயரில் காட்டப்படும நிகழ்ச்சிகளுக்கு இந்தி உரை தரப்படுவதைத் தவிர்த்து, இந்த நேரிடையான இந்தித் திணிப்பை அகற்றி, அத்தகைய நிகழ்ச்சிகளில் தமிழ் உரை மட்டுமே இடம்பெற வேண்டுமென இம் மாநாடு நடுவண் அரசைக் கேட்டுக் கொள்கிறது.

3. உலகமாப் பேரறிஞர் திருவள்ளுவருக்கு குமரிமுனையில் மிகப்பெரிய அளவில் நினைவு மண்டபம் எழுப்பிச் சிறப்புச் செய்ய வேண்டும் எனத் தமிழ்நாட்டு அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

4. தமிழகத்தில் அண்மையில் பட்டி தொட்டி எல்லாம் ஏராளமாகத் தோன்றி வரும் குழந்தைகள் ஆங்கிலப் பள்ளிகளுக்குத் தடையிட்டுத் தமிழுக்கும் தமிழில் பட்டம் பெற்றோருக்கும் வேலைவாய்ப்புப் போன்ற அனைத்துத் துறைகளிலும் முதலிடம் அளிக்கப்பட வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

5. மதுரை, மற்றும் பழனித் திருக்கோயில்களில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள, பொதுவாகத் தமிழில் இறை வழிபாட்டுரைகளைக் கூறுவதும், விரும்புவோர்க்கு மட்டுமே வடமொழி வழிபாட்டுரைகளைக் கூறுவதும் என்ற வழிபாட்டு முறையைத் தமிழ் நாட்டிலுள்ள, பிற அனைத்துத் திருக்கோயில்களிலும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டிய உத்திரவினைத் தமிழ்நாட்டு அரசு பிறப்பிக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது,

6. நயன்மை அரசர் மகராசன் தலைமையில் அமைந்த ஆய்வுக் குழு கூறியுள்ள பரிந்துரைப்படியான தமிழுக்குமுகாயத்தின் அனைத்துப் பிரிவினரும் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் இறை வழிபாட்டுரையாளர்களாக அமர்த்தப்பட தமிழ்நாட்டு அரசு உத்திரவு இடவேண்டும் என்றும், இதுபற்றி நடுவணரசால் இந்திய அரசியல் அமைப்புத் திருத்தப்படும் வரை தமிழக அரசு காத்திருக்க வேண்டிய தேவையில்லை என்றும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

7. நெருக்கடி நிலைக்காலத்தில் பேரா. தங்கவேலனார் எழுதி, வெளியிட்ட நிலையிலேயே, தடை செய்யப்பட்ட 'தமிழ்நில வரலாறு' என்னும் நூலைத் தமிழக அரசு வெளியிட்டு உண்மைத் தமிழர் வரலாற்றை உலகிற்கு உணர்த்த வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

உதகை மண்டிலம் அமைப்புக் கூட்டம்

கடந்த 7-9-82 வியாழன் முற்பகல் 11-45 மணிக்கு உதகை மண்டிலம் அமைப்புக் கூட்டம், உதகையில் உள்ள கூட்டுறவாளர் விடுதியில்,பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் நடைபெற்றது

பாவலரேறு அவர்களுடன் ,புதுவை மாநில அமைப்பாளர் ப அருளி அவர்களும், தலைமைக்கழக முதன்மைக்குழு உறுப்பினரும், தென்மொழி புரப்பாளரும் ஆகிய நா. இளமாறன் அவர்களும் உடன் இருந்தனர். அமைப்பு நிகழ்ச்சிக்கு நீண்ட நாளைய தென்மொழி அன்பரும், பகுத்தறிவாளர் கழகத் தலைவரும் ஆகிய மு. சிதம்பரநாதன் க.இ. அவர்கள் துணையிருந்தார். மாவட்ட தி.க. அமைப்பாளரும் தீவிரப் பகுத்தறிவாளரும் ஆகிய இரா. சாந்தன் அவர்கள் மிகுதியும் நிகழ்ச்சிக்குப் பொறுப் பேற்றுக் கொண்டார். வந்திருந்த அன்பர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் 'மலைமலி' இதழாசிரியரும் படுகர் இனத்தில் தோன்றித் தமிழ் கற்றுப் புலவராக இருப்பவரும் ஆகிய புலவர். இலி நஞ்சன் க.மு. ஆவர்.மற்றும் சின்கோனுத்துறை அன்பர்கள், புரதப் பொருள் உருவாக்கத் தொழிற்சாலை அன்பர்கள் பலரும் வந்து அமைப்பு நிகழ்ச்சிக்கு ஆதரவளித்தனர். நீலமலையின் இரண்டு நாள் தங்கலிலும் முதல்வர் பாவலரேறுவுடன் அன்பர்கள் பல்வகையிலும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர் அமைப்பு நிகழ்ச்சியைச் சிறப்பாக முடித்துக் கொண்டு 9-9-82 காலை கழகப் பொறுப்பாளர்கள் கோவை திரும்பி, அன்றுமாலை சூலூர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அன்பர்களுக்கோர் நல்வாய்ப்பு!

அனைவரும் தவறாமல் பங்கு பெறுக!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்
திருக்குறள் தொடர் சொற்பொழிவு

சென்ற ஆண்டு சேலம் மாவட்டம், கோனேரிப்பட்டியில் நடைபெறுவதாயிருந்து, இடையில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் மனு எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றமையால் நின்று போன **திருக்குறள் தொடர் சொற்பொழிவு** அடுத்து வரும் **திசம்பர் 24-ஆம் பக்கல் தொடங்கி, 1983 சனவரி 2-ஆம் பக்கல் வரை,** 10 நாட்கள், பெரியார் மாவட்டம் **பவானியில்** 'பாவேந்தர் இலக்கியப் பேரவை' சார்பாக நடைபெற இருக்கிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். விரிவான அறிக்கை பின்னர் வெளியிடப் பெறும்.

முன்கூட்டியே விளக்கம் வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும்.

காவேரி மின்நகர்,
குதிரைக்கல் மேடு (அஞ்)
பவானி (வழி), 638302.

அமைப்பாளர்
தென்மொழி. நா. இளமாறன்
இளம் பொறியாளர்

ஏற்கமாட்டோம் அறிவீர்!

— இறைக்குருவனார் —

இந்தியம் தேசியம் ஒருமையொற் றுமையென
  இன்னும் பலபிதற்றி
வந்திருக் கும்மரை நூற்றாண்டுக் காலமாய்
  வாழ்க்கை நலங்கெடுத்தீர்
நொந்திருக் குமெங்கள் நெஞ்சத்தை மேன்மேலும்
  நோவச்செய் தேமகிழ்வீர்
இந்தியொன் றோயிந்தி யாவையுய என்றுமே
  ஏற்கமாட் டோமறிவீர்! 1

முந்தியிங் கேவந்து வெள்ளையர் நாட்டிய
  மொய்ம்புறு பேரரசை
மந்தையைப் போலநீர் கூடிப் பெருகவும்
  மாறுபட் டேயெதிர்க்க
இந்தியோ நுங்களை ஒன்றித்து நின்றதென்
  றெண்ணுந் திறமிலிரோ
இந்தியொன றோயிந்தி யாவையும் என்றுமே
  ஏற்கமாட் டோமறிவீர்! 2

இந்தியா இந்தியர் என்றெமை மாட்டினீர்
  இந்துப் பெயர்சூட்டினீர்
சொந்த மொழியிது நம்மவ ருக்கெனச்
  சொல்லிப்பல் லைக்காட்டினீர்
தந்திர மாகவே இந்தியி னால்மட்டந்
  தட்டத்திட் டந்தீட்டினீர்
இந்தியொன் றோயிந்தி யாவையும் என்றுமே
  ஏற்கமாட் டோமறிவீர்! 3

குந்தி யரசாளுந் தில்லிய ரேதிட்டக்
  குழுவினி லுங்கூட்டினீர்
எந்தமிழ் நாட்டுத் தொலைக்காட்சி வானொலி
  இன்ன பிறவற்றிலும்
குந்தக நெஞ்சுடன் கொட்டம் அடிக்குநும்
  குறிப்பை அறியேமோ
இந்தியொன் றோயிந்தி யாவையும் என்றுமே
  ஏற்கமாட் டோமறிவீர்! 4

வெந்தழல் பாய்ந்துடல் வேகின்ற போதிலும்
  வேறு நினைப்பறியார்
செந்தமிழ் வாழிய வாழியென் றேவுரை
  செய்தவர் எந்தமிழர்
இந்திவல் லாண்மை எதிர்த்து மடித்தவர்
  இன்னுயிர் மீதாணை
இந்தியொன் றோயிந்தி யாவையும் என்றுமே
  ஏற்கமாட் டோமறிவீர்! 5

வழக்கு மன்றங்கள் வண்டமிழால் இயங்க....

[சிந்தனைச் செம்மல். கு. ச. ஆனந்தன், வழக்குரைஞர், கோபி.]

இன்றைய இந்தியச் சட்ட முறையும், அறத் துறையும், ஆங்கிலப் பேரரசால் நிறுவப்பட்டவை; பிரித்தானியச் சட்ட இயலையும் (British Juris prudence) நடை முறையையும் (Procedure) பின்பற்றி அமைக்கப்பட்டவை. எனவே அறமன்றங்களின் அனைத்து நடவடிக்கைகளும் தொடக்கம் முதல் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வருவதில் வியப்பில்லை. சட்டக் கருத்துகள். சட்ட நடவடிக்கைகள், வழக்குகள், வழக்குரைகள், தீர்ப்புரைகள் ஆகிய வற்றை எல்லாம் சென்ற 175 ஆண்டுகளாக ஆங்கிலத்திலேயே படித்து, விளங்கி, உணர்ந்து, ஆங்கிலத்திலேயே சிந்தித்து, ஆங்கிலத்திலேயே வெளிப்படுத்தி, அம் மொழியிலே, தொடர்ந்து பேசியும் எழுதியும் வந்தமையால், அறமன்ற நடவடிக்கைகளும் சட்ட முறையும் தமிழால் இயங்க முடியாது என்ற அழுத்தமான உணர்வு நம்மிடையே அறிவு நிலையைத் தாண்டிப் பரவலாகப் பரவியுள்ளது. அத்துடன் சட்ட நுட்பங்களைத் தமிழில் தர இயலாது என்ற மன வுணர்வும் வளர்ந்துள்ளது. ஆனால் அத்தகைய கருத்துகள் சரியானவை அல்ல.

சட்டத் தமிழ் வளர்ச்சிக் கழகம்

இங்கிலாந்தில் 18-ஆம் நூற்றாண்டு வரை, ஆங்கிலமும் அறமன்ற மொழியாகச் செயல்படத் தகுதியற்ற மொழி என்றும், இலத்தீன், பிரெஞ்சு மொழிகளே அதற்கு ஏற்றவை என்றும் கருதப்பட்டு வந்தது. ஆங்கில நாட்டு அறமன்றங்களில் நெடுங்காலம் ஆங்கிலம் இடம் பெறவில்லை. ஆனால் கி.பி. 1731-ஆம் ஆண்டில் இரண்டாம் சியார்சு மன்னர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம்தான் முறைமன்ற மொழியாக இருக்க வேண்டும் என்றும், அறமன்ற நடவடிக்கைகளில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தாவிடில் 50 பவுன்கள் தண்டத் தொகை செலுத்த வேண்டும் என்றும் ஒரு சட்டம் இயற்றப் பட்டது. அதன் பின்னரே, ஆங்கிலம் அறமன்ற மொழியாயிற்று. அதே நிலையில்தான் இன்று தமிழ் அறமன்ற மொழியாக இயங்க முடியாது, என்ற அடிப்படையற்ற தாழ்வு மனப்பான்மையும், அச்சமும் சட்ட, அறத் துறைகளைச் சார்ந்தவர்களைப் பற்றிக் கொண்டுள்ளன.

ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளாக, முறைமன்ற மொழியாக வளர்ச்சி பெற்ற ஆங்கிலத்தைப் போன்று, சட்டக் கருத்துகளையும், நுட்பங்களையும், முறைமன்ற நடவடிக்கைகளையும், தீர்ப்புரைகளையும், தமிழில் திட்பமாகவும், தெளிவாகவும் ஐயம் திரிபுக்கு இடமின்றியும் வெளிப்படுத்தும் நடைமுறை நிலையைத் திடுமெனப்

படைத்துவிட முடியாது என்பது உண்மைதான். அறமன்ற நடவடிக்கைகள், ஆங்கிலத்திலிருந்து தமிழில் மாற்றப்படும் இடைக்காலத்தில், "சட்டத்தமிழ்" முறையாக வளர்ச்சி பெற வேண்டும். அதற்குத் திட்டமிட்ட சரியான செயல் முறைகள் தேவை.

சட்டங்களையெல்லாம் தமிழில் மொழியாக்கம் செய்து விடுவதாலேயோ, அல்லது சில சட்ட அகராதிகளை உருவாக்கி விடுவதாலேயோ, தமிழ் முழுமையான முறைமன்ற மொழியாக நடைமுறையில் வந்து விடாது. தமிழிலேயே சட்டத்தைப் பயின்று விளங்கி, உணர்ந்து, சிந்தித்து, அச் சட்டக் கருத்துகளைத் தமிழில் எழுதியும், பேசியும், அவற்றின்வழி உருவாகும் பல முடிவுகளையும் விளக்கங்களையும், நுண்மைகளையும், தமிழிலேயே வெளிப்படுத்தும் பழக்கத்தையும், ஆற்றலையும் பெற வேண்டும். அதற்கு அடிப்படையாகச் சட்டங்களைத் தமிழில் முழுக்க முழுக்கக் கற்றுக் கொள்ளும் புதிய தலைமுறையும், உருவாக வேண்டும். அதற்குச் சில ஆண்டுகள் தேவைப்படலாம்; ஆனால், அஃது இயலாததன்று.

சட்டக் கருத்துகளையும், நுண்மைகளையும், வழக்குகளையும் தமிழிலேயே படித்து, சிந்தித்து, ஆய்ந்து முழுமையாக நடைமுறைப்படுத்தும், அப் புதிய சட்டத் தமிழ்ச் சூழலை உருவாக்குவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும், தமிழக அரசு திட்டமிட்டு விரைந்து மேற்கொள்ள வேண்டும். சட்ட அறத்துறைகள் சார்ந்த அனைவரின் ஒத்துழைப்புடனும், அத் திட்டங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். இங்கொன்றும் அங்கொன்றுமான அரைகுறை முயற்சிகளால் பயனில்லை.

தொடக்க நிலையில், அனைத்துச் சட்டங்களையும், அவற்றின் விளக்கங்களையும், உட்கருத்துகளையும், நுட்பத்துடன் தரத்தக்க அடிப்படை நூல்களையும், தெளிந்த அணுகு முறைப் புத்தகங்களையும் தமிழில் ஆக்க வேண்டும்.

அறமன்ற நடவடிக்கைகளில் தருக்கவுரைகள் (Pleadings) படிவங்கள் (Forms), சான்றியங்கள், (சாட்சியங்கள்), ஆவணங்கள், (Documents) உசாவல் (விசாரணை), தீர்ப்புரை ஆகியவை பொதுவாக இடம் பெறுகின்றன. அவற்றில் சில ஆங்கிலத்திலும், இன்னும் சில தமிழிலும், அரைகுறையாக நடைபெற்றால், முறைமன்றங்களில் தமிழ் முழுமையாக நடைமுறைக்கு வாராது; உரிய பயனும் கிட்டாது. எனவே அவற்றிற்குத் தேவையான அனைத்தையும் தமிழிலேயே ஆக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்.

சட்டக் கூற்றுகள், வழக்குகளுக்கேற்ப சட்டங்களைக் கையாளுதல், அவற்றில் தொக்கியுள்ள உட்கருத்துகளை வெளிப்படுத்துதல்; விளக்கங்கள் தருதல்; அவற்றிற்கெல்லாம் மூலமாக அமையும், தருக்க வுரைகள், சான்றியங்கள்

ஆவணங்கள், உசாவல்கள் இவ்வளவையும் பயன்படுத்திப் பெறும் தீர்ப்புரைகள் போன்றவற்றை எல்லாம் தமிழில் தெளிவாகவும், நுட்பமாகவும் தருவதற்குரிய வழிவகை செய்கிற **'சட்ட விளக்க உரைகள்'** (Commentaries) **''சட்ட அகராதிகள்'**, **'சட்டச் சொற்களஞ்சியம்''** (Law Lexicon) **''தீர்ப்புத் திரட்டுகள்'', ''இதழ்கள்''** (Journals), **''சட்டத் தொகுப்புகள்''** (Law Digests) போன்ற அனைத்தும் - ஒரே சீர்மையுடன் — பயன்படுத்தத் தக்க அளவில் — தமிழாக்கப்பட வேண்டும். சுருங்கச் சொன்னால் எத்தகைய நுண்மையான சட்டக் கருத்துக்களையும் ஐய, முரண்பாடுகளுக்கு இடமின்றியும், திரிபு தோன்றுமலும் எழுதுவதற்கும், எடுத்துப் பேசுவதற்கும் உரிய வகையில் **சட்டத் தமிழில்** பல நூல்களை விரைந்து செய்ய வேண்டும்.

தமிழை அறமன்ற மொழியாக நடைமுறைப்படுத்தும் தொடக்க நிலையிலும், அவற்றிற்குரிய பல கருவி நூல்களை உருவாக்கும் போதும், சில இடையூறுகளும் குறைபாடுகளும் வருவது இயற்கையே. அதனால் தளர்ச்சியடையத் தேவையில்லை.

சட்டத் தமிழ் திட்டங்களை ''உடனடித் தேவைகளை நோக்கமாகக் கொண்டவை'', ''நீண்ட காலத் திட்டங்கள்'' என்ற இரு வகைகளாகப் பகுத்துக் கொண்டு, குறிப்பிட்ட கால வரையறையைக் கணக்கில் கொண்டு, அக் காலவரம்பிற்குள், அவற்றைத் தப்பாமல் நிறைவேற்ற வேண்டும்.

சட்டத் தமிழுக்குரிய தனியொரு புதிய அமைப்பை **''சட்டத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தை''** — உருவாக்கிச் செயல்பட வேண்டும்.

சில கருத்துரைகள்!

1. இப்போதைய நிலையில் சட்டத் தமிழ் மொழி பெயர்ப்புகள் மூன்று அமைப்புகளில் நடைபெற்றுவருகின்றன. ஆனால் முறைமன்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான முழுமையான அளவில் அவை நடைபெறுவதில்லை. **''ஆட்சி மொழி ஆணையம்''** (Official Language Commission) நடுவண் அரசின் சட்டங்களையும் ஆணைகளையும் மொழிபெயர்க்கிறது. சட்ட அகராதி ஒன்றையும் குறையுடன் வெளியிட்டுள்ளது; **''தமிழ் வளர்ச்சிக் கழகம்''** பொதுவாக வேற்று மொழி நூல்களையும், இலக்கியங்களையும் தமிழில் மொழி பெயர்ப்பதோடு, தமிழக அரசின் பல சட்டங்களையும் ஆணைகளையும், தமிழாக்கம் செய்வதையும் தனது பணியில் ஒரு கூறாகக் கொண்டுள்ளது. **''தலைமைச் செயலகத்தில்''** அரசின் சில ஆணைகள், நெறிகள், மற்றும் அரசு நடவடிக்கைகள், ''மொழிபெயர்ப்புத்துறையால்'' தமிழாக்கம் செய்யப்படுகின்றன.

ஆனால் 1-2-82 முதல் மாவட்ட அறமன்றங்கள் வரையிலான எல்லா அறமன்றங்களும் தமிழில் இயங்க வேண்டுமென அரசு

ஆணையிட்டுள்ளது. அதற்குத் தேவையான அனைத்தையும் உடனே செய்து தர, இம் மூன்று அமைப்புகளின் தனித்தனிப் பணிப் புலங்கள் போதவில்லை. **'தமிழ்ப் பல்கலைக் கழகம்'** இப்போதைய நிலையில், சட்டத்துறையில் தேவையான நூல்களை உருவாக்கவும் மொழி பெயர்க்கவும் **அணியமாகவில்லை.** எனவே முழுமையான முறைமன்ற மொழியாகத் தமிழை இயக்க வைப்பதற்குரிய ஆய்வையும், திட்டங்களையும் அனைத்துச் செயல்களையும் மேற்கொள்வதற்குத் **'தன்னுரிமையுடன் இயங்கும் ஒரு தனி அமைப்பு' (சட்டத் தமிழ் வளர்ச்சிக் கழகம்)'** உருவாக்கப்படவேண்டும். மேற்சொன்ன மூன்று தனித்தனி அமைப்புகளின் சட்டத் தமிழ் சார்ந்த பணிகளையும் புதியதாக அமைக்கப்படும் **'தனி அமைப்பு'** எடுத்துக் கொண்டு, அவற்றை ஒருங்கிணைத்துச் செயல்படுவதுடன், இரண்டாண்டுக் காலத்தில் சட்டத் தமிழ் முழு வளர்ச்சி அடையக் கூடிய அளவினதான அனைத்துப் பணிகளையும் அந்த அமைப்பே மேற்கொள்ள வேண்டும்; அல்லது இன்றிருக்கும் **"ஆட்சி மொழி ஆணையத்தையே"** இன்னும் பல பகுதிகளுடன் விரிவாக்கிச் சட்டத் தமிழ் வளர்ச்சி பற்றிய அனைத்தையும் அதனிடம் ஒப்படைக்க வேண்டும். **இந்த அமைப்பில், 'தேவையான அளவிற்கு மட்டும் அரசு அலுவலர்கள் இடம் பெற வேண்டும்; தமிழ் மற்றும் சட்ட வல்லுநர்கள் அதிக அளவில் இருத்தல் வேண்டும்.**

2. தனியார் துறையை நாடாமல் அறமன்ற நடவடிக்கை மொழி (சட்டத் தமிழ்) வளர்வதற்குரிய அனைத்தையும் அரசே முன் நின்று செய்ய வேண்டும்.

3. தொடக்கத்தில் தமிழக உரிமையியல் முறைமன்றச் சட்டங்கள் அனைத்தையும் தமிழாக்கம் செய்து ஒருங்கிணைத்துச் **"தமிழ்நாடு உரிமையியல் முறை மன்றச் சட்டங்களின் தொகுப்பை"** (Tamil Nadu Civil Court Manual) சிறு குறிப்புகள்) மேற்கோள் குறிப்புகள், நெறிகள் (Rules) ஆகியவற்றுடன் வெளியிட வேண்டும்.

4 அதே போலத் **"தமிழ் நாடு குற்றவியல் முறைமன்றச் சட்டங்களின் தொகுப்பையும்"** (Tamil Nadu Criminal Court Manual) மொழியாக்கம் செய்ய வேண்டும்.

5. நடுவண் அரசைச்சார்ந்த **'உரிமையியல் மற்றும் குற்றவியல் அறமன்றச் சட்டங்களின் தொகுப்புகளையும்'**, தமிழக அரசின் நெறிகளுடனும், குறிப்புகளுடனும், தமிழாக்கம் செய்து, **தனித்தனித் தொகுப்புகளாக** வெளியிட வேண்டும்.

6. சில அடிப்படையான சட்டங்களுக்குரிய **சட்ட விளக்க உரைகளைப்** (Commentaries) புகழ் பெற்ற ஆசிரியர்களின் அல்லது பதிப்பகங்களின் இசைவு பெற்று உடனடியாகத் தமிழாக்கம் செய்து வெளியிட வேண்டும்.

இனி எந்நாளோ ?

— கா. வில்லவன். புதுவை.

ஏடெடுத்தும் எழுத்தாணி தனை எடுத்தும்
எழுத்தாளர் எனத்தம்மைப் பீற்றிக் கொள்ளும்
கூடுவிட்டுத் திரிந்தலைந்து மற்றும் கூவிக்
கொக்கரிக்கும் நிமிர்சேவல் போல்வார் தம்மை
"ஏன்ஐயா எழுதுகின்றீர் ?" உரைப்பீ ரென்றால்
"என் அரிப்பைத் தீர்க்கத்தான்" என்று கூறும்
பான்மையிலா மட்டியெலாம் மலிந்து விட்டால்
படைப்புலகம் உருப்படும்நாள் இனிஎந் நாளோ ?

எருமைக்குத் தினவெடுத்தால் சுவரில் தேய்க்கும்
ஈக்களுக்கோ அரிப்பென்றால் மலத்தை மொய்க்கும்
இருளுக்கோ உறவானோர் ஒளியை மாய்ப்பர்
இழிஞர்தம் மனஅரிப்பை முகமே காட்டும்
மருளுக்கே இரையாகி வாழ்வில் என்றும்
மயக்கத்தில் வாழ்ந்திருக்கும் வீணர் தம்மின்
கருவில்லாப் பிண்டமதைப் படைப்போம் என்று
கதைத்திடுதல் கடிந்தொழிதல் இனிஎந் நாளோ ?

(முன் பக்கத் தொடர்ச்சி)

மாதிரிக்குச் சில :-

(1) உரிமையியல் நடைமுறைச் சட்டம்.
(2) குற்றவியல் நடைமுறைச் சட்டம்.
(3) சான்றுச் சட்டம்.
(4) கால வரம்புச் சட்டம்.
(5) சொத்து மாற்றச் சட்டம்.
(6) இந்தியத் தண்டனை இயல் சட்டம்.
(7) இந்துச் சட்டம்.
(8) நொடிப்பு நிலைச் சட்டங்கள்.
(9) பதிவுச் சட்டம்.
(10) முத்திரைச் சட்டம்.
(11) முறைமன்றக் கட்டணச் சட்டம்.
(12) ஏந்து (வசதி) உரிமைகள் சட்டம்.
(13) வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம்
(14) குறித்த வகை மாற்றீட்டுச் சட்டம். (Specific Relief Act.)
(15) மாற்றுமுறை ஆவணங்களின் சட்டம். (Negotiable Instruments Act)
(16) மருத்துவச் சட்ட இயல். (Medical Juris prudence.)

இவற்றிற்கும் இவைபோன்ற இன்னும் சில அடிப்படைச் சட்டங்களுக்கும், புகழ் பெற்ற ஆசிரியர்களால் எழுதப்பட்ட விளக்க வுரைகள் தமிழில் வருவது உடனடித் தேவை. (தொடரும்)

தமிழ் மரபுப் பண்ணையில் விளைந்த நச்சுச் செடிகள்

— கோ.மு. பெருமாள்.

தொலைக்காட்சியில் 'ஒலியும் ஒளியும்' என்னும் திரைப்படப் பாடல் காட்சிகள் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன. அவற்றில் 'மீரா' என்னும் பழைய திரைப்படத்தினின்றும் திருவாட்டி எம்.எசு. சுப்பு லட்சுமி பாடிய 'காற்றினிலே வரும் கீதம்' என்னும் பாட்டு இழை யோடி வந்தது. அதில் வரும் 'கீதம்' என்னும் சொல்லை ஆளும் பொழுது வடமொழி ஒலிப்பு முறைப்படி 'கீத்தம்' என்று பலுக்கி னார் பாடகியார். பொறுக்க வியலாத நான், 'தமிழ்' என்ன பாடு படுகிறது இவர்களைப்போன்றவர்களிடம் அகப்பட்டுக்கொண்டு!' என்று வருத்தப்பட்டுக் கூறினேன். அந்த அம்மாவிடம் தீவிர அன்புடைய ஒருவர், சொற்களை ஒலிப்பதில் அந்த அம்மாவுக்கு யாருமே நிகரில்லை எனவும், 'எந்தவொரு சொல்லையும் அதனுடைய சரியான ஒலிப்பைத் தெரிந்து கொண்டுதான் கையாளுவார் அவர்' எனவும் கூறி, 'கீதம்' என்ற சொல்லின் சரியான சமற்கிருத வடிவம் 'கீத்தம்' என்பதுதான் என்றும் வெற்றுரையாடினார். தமிழில் பாட வந்த பாடகி தமிழ் ஒலிப்பு மரபைப் புறம் தள்ளி விட்டுச், சமற் கிருத முறையை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருத்தல் கருங் காலித்தனமானது என்றும், இந்தப் பாடகியார் எப்பொழுதுமே இவ்வாறே தமிழைச் சிதைத்து வருதல் வழக்கமாகிப்போய்விட்டது என்றும், இனி இவர்களைப் போன்றவர்களையும், இவர்களைத் தாங்கி நிற்பவர்களையும் திருத்தவே முடியாது என்றும், இனவுணர்ச்சி பெற்றுவரும் தமிழினம் இனி இவர்களையெல்லாம், எத்துணைதான் இவர்கள் தங்கள் கலை உத்திகளில் வல்லவர்களாக இருப்பினும், ஏற்காமல் புறத்தொதுக்கி மூலையில் உட்கார வைக்கும் என்பதில் ஐய மில்லை என்றும் உணர்வை அடக்க வியலாமல் கொட்டித்தீர்த்தேன்.

இன்தமிழால் இறைவனைப் பாடிப்பரவிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் வடமொழிப் பெயர்களை யெல்லாம் தமிழாக்கியே கையாண்டார்கள் என்பது யாவரும் அறிந்ததொன்றாகும். 'கருத் தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றினில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே' என்பது ஆண்டாள் பாடிய பாசுரம். 'கம்சன்' என்ற வடமொழி வடிவம் கஞ்சன் என்று தமிழ்ப்படுத்தப் பட்டிருக் கிறது இங்கே. மேலும் 'இந்த்ர' என்பது 'இந்திர' என்றும் 'பங்கஜம்' என்பது பங்கயம் என்றும் இன்னும் பல வடமொழிச் சொற்கள் தமிழ்ப்படுத்தப்பட்டே ஆளப்பட்டுள்ளன. இராம காதை யைப் பாட வந்த கம்ப நாட்டாழ்வாரும் 'இராமன்', 'இலக்குவன்', 'அனுமன்', 'தயரதன்' ,வீடணன்' என்னும் தமிழ் வடிவம் கொடுத்தே பாவியம் படைத்தார். பின்பு வந்த கிருத்துவ, முகமதியப் பாவலர்கள்

கூட இந்த மரபை மாற்றவே இல்லை. இவர்கள் அனைவரையும் அறிவிலிகளாக்கிவிட்டார் இப் பாடகியார்.

பெரியாழ்வாரின் பாசுரம் ஒன்றில் "ஆரா அமுதனைப் பாடிப் பர; அயோத்தியர் வேந்தனைப் பாடிப் பர", என்றவோர் அடியைப் பாட வந்த அதே பாடகியார் 'அயோத்தி' என்பதனையும் இவ்வாறே வடமொழி அழுத்தம் கொடுத்து அடிவயிற்றிலிருந்தும் அந்த அயோத்தியை வெளியே கொண்டு வந்து அருந்தமிழ் மாபின் மென்னியைப் பிடித்து நெருக்குகிறார்.

இந்தக் கூட்டத்தினர்க்குப் பிறப்போடேயே இந்தத் தமிழ்மர பெதிர்ப்புணர்வும் பிறந்து விடும் போலும்! இவர்களின் குழந்தைகள் தமிழ்ச் சொற்களை ஒலிக்கும் முறையைக் கேட்டாலே இது தெளிவாக விளங்கும். கண்ணன் என் சேவகன்' என்னும் பாரதியார் பாடலில் 'சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர் தங்களுடனே சுற்று வேன்' என்னும் அடியினைத் தொலைக்காட்சியில் பாடவந்த ஓர் ஆரியச்சிறுமி "ஷ்ரமத்தைப் பார்ப்பதில்லை" என்றே பாடிப், பாரதியாரை முட்டாளாக்குகிறாள். பாவலன் இயற்றிய அடியினை மாற்ற இவர்களுக்கு என்ன நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும்!

திருவாட்டி எம்.எசு. சுப்புலட்சுமியும் தமிழ்ப் பண்ணையில் தோன்றிய நாற்றென்றாலும், ஆரியப் பண்ணையில் மாற்றி நடப்பட்ட பயிராதலால், ஆரியமாயையெனும் ஆரவாரச் சாரம் ஊட்டப்பட்ட தமிழ்க்கொல்லி மரமாக ஓங்கி வளர்ந்துள்ளார். இந்த அம்மாவுக்குத் தமிழில் பாடுவதென்றாலே வேப்பங்காயாக் கைக்கும். எந்த இசை நிகழ்ச்சியிலும் தமிழ்ப் பாடல் பாடுவதென்பதே கிடையாது; பாடினு லும் வேண்டா வெறுப்பாக ஒரு பாடலை (அதுவும் மேற்கூறிய முறையில் தமிழைக் கொலை செய்து) பாடுவார். இவர் ஒன்றிய நாடுகள் அவையிலும், மற்றும் வெளிநாட்டு அரங்குகளிலுமெல்லாம் செய்த இசை நிகழ்ச்சிகளால் தமிழுக்கு நேர்ந்த தாழ்ச்சி சொல்லுந் தரமன்று. இவ்வகையினரை நம்மவர்களே தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள் என்று அறிகையில் மெத்தவும் எரிச்சலாக வருகிறது. மேலும் இவர்கள் பாணியையும் வேறு பின் பற்றத் தொடங்கிவிடுகிறார்களே! இவர்களின் அறியாமையை என்ன வென்பது! தமிழ் மரபுக்கு அதிகாரி ஆரிய வெறியர்களா? பெருங் கொடுமையன்றோ அது!

இவர்களின் இத் தமிழினப் பகைப்போக்கை இறுதியாகத் தடுத்து நிறுத்த வேண்டியது, உடன் நாம் ஆற்றவேண்டிய கடமை யாகும். இல்லையெனில் இவர்களின் இந்த அழிம்புப் பண்பாடு என்னும் நச்சுச் செடியால் தமிழ்மரபாகிய நற்பயிர்களெல்லாம் பூண்டற்றுப் போய்விடும். தமிழ் மரபினைப் பேணும் கலை இயக்கம் கண்டு அவர்களையெல்லாம் மூலையில் ஒதுக்கும் முயற்சிகளை மேற் கொள்வோமாக. ○

எத்தனை நாள் பொறுத்திருப்பாய்?

— தமிழவேள்

தொல்லுலகில் முதல் அரசு தமிழரசு தான்என்ப(து)
அறியா யோநீ ?
பல்லவர்க்கு முன்வரையிப் பாராண்டு வந்தவர்உன்
முன்னோர் அலரோ ?
நல்விலங்கு பூண்டநதோ நாயினுக்கும் கீழாய்உன்
நாட்டு மக்கள்
அல்லலுறல் காண்கிலையோ ? ஆர்த்தெழுதல் எப்போதோ ?
தமிழா சொல்வாய்!

ஒட்டுறவாய்த் தமிழரெலாம் ஒருதாயின் மக்களென
வாழ்ந்து வந்த
கட்டுறவைச் சாதியினால் கீழறுத்துப் பலநூறு
பிரிவாய்ச் செய்தே
உட்பகைதான் ஊடுருவி உன்னினத்தை வீழ்த்திடுதற்(கு)
ஓயா(து) ஆற்றும்
திட்டத்தை அறியாயோ ? துடித்தெழுதல் எப்போதோ ?
தமிழா சொல்வாய் !

பெண்காட்டிப் பொன்காட்டிப் பேதைமையை நன்(கு)ஊட்டி
உன்னுட் டாரைக்
கண்மூடிப் பழக்கமெனும் காரிருளில் ஆழ்த்திவிட்டுத்
தாங்கள் மட்டும்
விண்ணிருந்து வந்தவரென்(று) ஒருகூட்டம் உன்னினத்தை
நன்றாய் ஏய்த்துக்
கொண்டிருத்தல் மெய்யிலையோ ? கனன்றெழுதல் எப்போதோ?
தமிழா சொல்வாய் !

நொதுமலராய் உள்நுழைந்து நன்றாகக் கால்ஊன்றி
நின்று கொண்(டு)உன்
பொதுவளர் நல் அரசழித்துப் பெருநூல்கள் பலவழித்து
மொழியி னுள்ளும்
மெதுவாகப் புகுந்ததனை மிதித்துவரும் கொடும்பகையின்
செயலை யெல்லாம்
எதுவரைதான் பார்த்திருப்பாய் ? எப்போது சினந்தெழுவாய்?
தமிழா சொல்வாய் !

செத்தமொழி வடமொழியும் செம்மையிலா ஆங்கிலமும்
சிறப்புற்(று) ஓங்க
முத்தமிழ்தன் ஆட்சியினை முதன்மையினை இழந்திங்கே
இறக்க வேண்டிப்
பித்தரெனப் பேயரெனப் பெரும்பகைவர் செய்துவரும்
கொடுமை தன்னை
எத்தனை நாள் பொறுத்திருப்பாய்? எப்போது கிளர்ந்தெழுவாய்?
தமிழா சொல்வாய் !

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்
(தலைமையகம்)

பொறுப்பு அமர்த்த அறிக்கை-5

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் பெறுப்பாளர்களாகக் கீழ்க்காணும் அன்பர்கள் கொடுக்கப்பெற்றுள்ள பதவிப் பொறுப்புகளில் 1-10-82 முதல், கழகச் சட்டநெறிமுறைகட்குட்படும் பதவியாண்டுக் காலத்திற்குப் பதவிப் பொறுப்புகளில் அமர்த்தப் பெற்றுள்ளனர்.

தலைமையகம், சென்னை-5
1-10-82 }

பெருஞ்சித்திரனார்,
கழக முதல்வர்.

க **தென்னார்க்காடு மாவட்டம் — வடக்கு** (விழுப்புரம்)

பொருளர் : **அ. நக்கீரன்.**

(ஏற்கெனவே தென்னார்க்காடு மாவட்டம் (வடக்கு) பொருளராக அமர்த்தப் பெற்ற ச. சின்னத்துரை, நெய்வேலி 4 நகரிய வட்டச் செயலராக 3-9-82 முதல் அமர்த்தம் பெறுகிறார்.)

2. **விழுப்புரம் வட்டம்**

விழுப்புரம் வட்டச் செயலராக அறிக்கை 2இல் அமர்த்தம் பெற்ற அ. நக்கீரன், தென்னார்க்காடு மாவட்டப் பொருளராக 3-8-82 முதல் அமர்த்தம் பெறுகிறார். (பொருளர் ஆய்வில்)

3. **நெய்வேலி நகரியம்—வட்டம்**

தலைவர் : கன்னிமாறன் (வைத்தி கிருட்டிணமூர்த்தி), நெய்வேலி.
செயலர் : ச. சின்னத்துரை, நெய்வேலி.
பொருளர் : க. மணி, நெய்வேலி

4. **பண்ணுருட்டி வட்டம்**

தலைவர் : புலவர். இரா. த. சக்திவேலவன் க.மு; கல்.இ., பண்ணுருட்டி.

(செயலர், பொருளர் ஆய்வில்)

5. **விழுப்புரம் நகரம்**

தலைவர் : சா. இராமநாதன், விழுப்புரம்.
செயலர் : மு. இளங்கோவன், கீழ்ப்பெரும்பாக்கம்
பொருளர் : இரா. சீனிவாசன், கீழ்ப்பெரும்பாக்கம்.

உ முகவை மாவட்டம்—கிழக்கு (இராமநாதபுரம்)

1. சிவகங்கை வட்டம்

பொருளர் : கா. மாணிக்கம்
(செயலர் முன்னரே அமர்த்தப் பெற்ருர். தலைவர் ஆய்வில்)

2. பரமக்குடி வட்டம்

பொருளர் : மு. பொன்னம்பலம், மும்முடி சாத்தான்
(அறிக்கை-4இல் தலைவராக அறிவிக்கப் பெற்றுள்ள சி.ச. கருப்பையா, செயலர் பொறுப்பில் அமர்த்தப் பெற்றுள் ளார். தலைவர் ஆய்வில்)

ங. நீலமலை மாவட்டம்

மாவட்ட அமைப்பாளர் : மு. சிதம்பரநாதன் க.இ., உதகை.
,, செயலர் : செ. சக்திவேல் க.இ., உதகை.
,, பொருளர் : இரா. அரங்கசாமி அறி.இ., சின்கோணத்துரை.

1. உதகை மண்டிலம் வட்டம்

தலைவர் : இரா. சாந்தன், உதகை.
செயலர் : மு. கோபால், உதகை.
பொருளர் : க. கிருட்டிணராசு, உதகை.

தமிழ் நாளிகை

(தமிழ் நாள்காட்டி)

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு!

அழகிய எண்களுடன் தமிழ் மாதப் பக்கல்களும், தமிழ் நடைமுறை எண்களுடன் ஆங்கில மாதப் பக்கல்களும், ஒவ்வொரு மாதத் தாளிலும் தமிழ், தமிழின, தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்குரிய கொள்கை மொழிகளும் குறிக்கப் பெற்று, வரும் திசம்பர் முதற்கிழமையிலேயே விற்பனைக்குக் கிடைக்கும்படி அழகிய படத்துடன் கூடிய இருவண்ண நாளிகை வெளிவருகிறது.

விலை விளக்கம் பின்னர்,

தேவையானவர்கள் முன்கூட்டியே எழுதுக!

விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப் பெறும்.

தென்மொழி, சென்னை-5.

மழையும் குழந்தையும்! — பாவண்ணன்.

என்ன சொல்வேன் உன்றன் கூத்தை — அடியே
இப்படி வந்து நிற்கின்றாயே!

பன்னீர் என்று நீ நினைத்தாயா?
இல்லையேல், பால்மழை என நினைத்தாயா?
என்னடி கோலம் உன்றன் கோலம்!
விடாத மழையில் நனைந்து வந்துள்ளாய்;
முன்னும் பின்னும் தெரியாதவரின்
வீட்டு முற்றமாய் இருந்தால் என்ன?
என்ன நடந்திடும்?; மழைவிடும் வரையில்
ஒதுங்கி இருந்து வருவதினாலே!

பாரடி, இவ்வுடை இன்றுதான் அணிந்தாய்,
அதற்குள் எப்படி ஆனது என்று?
வாரி அடித்த சேற்றுக் குழம்பெலாம்
அடியே, உன்றன் சட்டையின் மேல்தான்;
வாரிய பின்னல் தெப்பமாய் நனைந்து
மழைத்துளி எப்படிக் கொட்டுகின்றது, பார்;
நேரத்துக்குள் அனைத்தையும் அவிழடி
நீரறத் துண்டினால் துவட்டி விடுகிறேன்.

பெட்டி இருந்ததால் புத்தகச் சுவடிகள்
பெய்த மழையிலும் தப்பிக் கொண்டன;
குட்டிப் பெண்ணே! கொட்டும் மழையினில்
உடல்நனைய வருவதில் இத்தனை மகிழ்வா?
பட்டுத் தெறிக்கும் கதிரவன் ஒளியில்
பட்டுச் சரிகை மின்னுதல் போலச்
சுட்டிப் பிள்ளையே, உன்றன் விழிகள்
சுழன்று மின்னும் அழகே அழகடி!

வா, வா! தமிழா! -புனல்வாயில் ஆறுமுகம்.

என்னுருந் தம்பியே எழுந்து நடவாய்!
இத்தமிழ் நாட்டினில் ஏன்இன்னும் தயக்கம்?
தன்மானங் காத்திடும் தளபதி நீதான்!
ததுப்படா தண்மொழி தமிழ்மொழி பேசி!

சிந்திடா செந்நீர் செந்தமிழ் காக்க !
சீரடா சிறப்புறும் சிந்தனை வார்க்க ;
நொந்தது, கெட்டது போதுமே ! நெஞ்சில்
நிமிர்த்தடா நீள்வாள் எண்ணம் பிறக்க !

ஆரிய வஞ்சகன் ஆற்றிய கொடுமைகள்
அழலென நெஞ்சினில் பொங்குது பாரடா !
சூரியக் கதிர்களாய் சுள்ளென்ற வீரம்
சூலட்டும் ; ஓங்கட்டும் ! சுட்டுப் பொசுக்குவாய் !

தோள்திமிர் கொள்ளடா தென்மொழி மாறா !
தொன்மொழி அழிப்பாரைத் தூற்றடா தோழா !
தேளெனக் கடுப்பெழக் கொட்டடா தீமையை !
தென்னவன் நெஞ்சினில் தென்றலாய் வீசடா !

அறியாமை மூடங்கள் உலகினில் மறக்க
ஆர்த்துநீ எழும்படா அஞ்சாமை கொள்ளடா !
நரித்தனக் கயவராம் ஆரியக் கும்பல்கள்
நாட்டிய மாயையில் அடங்குதல் முறையோ !

சிந்தனை வானிலே சீர்ப்பெறும் சுனைகளாய் !
சிந்திடும் குருதியின் சிதறல்கள் கணைகளாம் !
வந்திடும் காலமோ புறப்படும் வில்லினில்
வாய்த்திடும் வெற்றிகள் வழங்கடா தமிழா !

பறவை மொழிப் புலவன் ! —ஒளியவன்.

பனங்காட்டுக் குள்ளிருந்த என்றன் ஓலைப்
பழங்குடிசைக் கூரையின்மேல் வந்துட் கார்ந்தே
இனந்தெரா இசைமொழியில் இடைவி டாமல்
இரவெல்லாம் பறவையொன்றே அலறிக் கொட்டும் !
சினம்பொங்க நானந்தப் பறவை தனைச்
'சீசீசீ' என்றொலித்து விரட்டச் சென்றால்,
கனவுபோல் அப்பறவை பறந்து போகும் !
கலைத்துவிடும் என்னுடைய நெடுந்தூக் கத்தை !

தூக்கத்தைக் கெடுக்கவரும் பறவை தன்னைத்
தூக்கிலிட வேண்டுமெனும் எண்ணத் தோடு
தூக்கத்தை அன்றிரவு நிறுத்தி வைத்துத்
தொடர்ந்துவரும் பறவையினை எதிர்பார்த் திட்டேன்.
நோக்கத்தை நிறைவேற்றும் குறிக்கோ ளோடு
நோயாளி போல்படுத்து விழித்தி ருந்தேன் !
தேக்கிவைத்த தூக்கமெனும் ஆற்று வெள்ளம்
தெரியாமல் எனைமுழுகிச் சென்ற தந்தோ !

பறவைமொழி தெரிந்துகொள்ள வேண்டு மென்னும்
பற்றினிலே யதுபற்றி முயற்சி பூண்டேன்!
பறவைமொழி கற்பிக்கும் குருவைத் தேடிப்
படர்ந்திட்டேன்; இறுதியிலோர் முனியைக் கண்டேன்!
துறவார்ந்த அம்முனிவர் எனதுள் ளத்தைத்
துளைத்திட்ட வேட்கையினைத் தீர்த்து வைத்தார்!
பறவைமொழிப் புலமையைத் தேறி விட்ட
பகட்டினிலே நான்வீடு வந்து சேர்ந்தேன்!

என்வீட்டுக் கூரையின்மேல் நடுயா மத்தில்
என்றென்றும் வழக்கம்போல் வந்துட் கார்ந்தே
பொன்மொழிகள் உதிர்க்கின்ற பறவைச் சொல்லின்
பொருள்விளங்கிக் கொள்வதற்குக் காத்தி ருந்தேன்.
வன்புறவே பறவையினைத் தாக்கும் எண்ணம்
வரவில்லை; இனியந்தப் பறவை யோடும்
அன்புறவே உரையாடி இருக்க எண்ணி
ஆவலொடு விருந்தாக எதிர்பார்த் திட்டேன்!

(வேறு)

"காட்டியும் கொடுப்பான்; கழுத்தையும் அறுப்பான்!
கடைகெட்ட தமிழனைப் போலெவன் உண்டு!
வாட்டியும் வதைப்பான்; வட்டிக்கு வட்டி
வாங்குவான், பணமெனில் எதையுமே செய்வான்!
ஆட்டியும் படைப்பான் - அண்ணனைத் தம்பியே
அக்காள் தங்கையைக் கெடுக்கவும் துணிவான்!
ஈட்டியும் வாளும் பாய்வது போல்என்
ஈர நெஞ்சம் துயர்மிகப் படுவதே!

தந்தை தாயைமூச் சந்திக் கிழுப்பான்;
தாயை மான இழுக்கமும் செய்வான்;
சந்தையில் மனைவியை ஏலமும் விடுவான்;
சாத்திரம் கூடை கூடையாய் அளப்பான்!
இந்நிலம் வந்தவர் அவரவர் மொழியில்
எழிலுறப் பேசியும் எழுதியும் மகிழ்ந்தால்,
தன்மானங் கெட்ட தமிழனே பிறமொழி
தன்னையே விரும்பித் தமிழையும் மறப்பான்!

இன்னொரு பாவேந்தர் பாவலர் ஏறுவை
இழிவுத் தமிழன் கண்டிடு வானா?
மூன்னிரு விழிகள் ஒளியினை வழங்கியும்
மூடத் தமிழன் குழியினில் விழுந்தான்!
இன்னொரு பிறவி எனக்குள தென்றால்
இந்தத் தமிழர்கள் மண்ணிலே பிறவேன்;
என்னுடைக் குலமும் இனியதாய் மொழியும்!
என்றென்றும் எங்கும் வாழிய நிலத்தே!"

இவ்வண்ணம் பறவையார் எழுப்பிய முழக்கம்
இடியுண்ட நாகம்போல் கேட்கவும் ஆனேன்!
இவ்வண்ண மிருந்தநான் பறவையா ருக்கே
இயம்பினேன் பலப்பல பாராட்டு! அக்கணம்
"இவ்வண்ணம் ஏன் அலறு கின்றீர் அத்தான்!
எதைக்கண்டே அஞ்சினீர்? கனவென்ன கண்டீர்?"
இவ்வண்ணம் மனைவியும் எழுப்பி விட்டாள்!
இமைதிறந் தேன்! இளங் காலைகண் டேனே!

தலைவன் வருவது எந்நாள்? -கன்னல்.

ஆவியைக் குளிரவைக்கும் ஆற்றல்மிகு தாய்த்தமிழை
தாவி அணைக்காமல் தரைஎங்கும் வளர்க்காமல்
கூவிப் பிழைக்கின்ற குருடர்களைக் கழுவேற்ற
ஏவும் தலைவனை நாம் எக்காலம் தான்காண்போம்?

நன்றி கெட்டவரை நாம்போட்ட எச்சில்களைத்
தின்று கொழுப்பவரைத் திசைமயங்கிப் போனவரை
இற்றைத் தமிழர்களின் இனவுணர்வை அழிப்பவரைக்
கொன்று குவிக்கின்ற குளிர்தலைவன் வருவதெந்நாள்?

நிலவுத் தமிழ்மொழியை நினைவினிலே தேக்காமல்
அலையும் கயவர்களை அழுக்கில் புழுத்தவரை
விளைவித்த தடிமரத்தை வினைசெய்த பள்ளிகளைக்
களையும் தலைவனை நாம் காண்பதுதான் எக்காலம்?

உழைப்பைக் கொள்ளையிட்டே உண்டு கொழுப்பவரின்
பிழைப்பில் மண்போடப் போராட்டம் நடத்துதற்கே
அழைப்பு விடுக்கின்ற ஆற்றல்மிகு தலைவனுடன்
இழைந்து வாழ்வதுதான் எக்காலம்? எக்காலம்?

புறப்பாட்டின் முத்திரையே! -மணிமாறன்.

கண்மணியே! நெஞ்சம் கலங்காத போர்வாளே!
இன்பம் பயக்கும் இலக்கியமே கண்ணுறங்கு!
மூடத் தனத்தின் முதுகெலும்மைச் சாய்க்கவந்த
கோடை இடிமுரசே! கொள்கை நறுங்காற்றே!
இல்லாத வொன்றை இருப்பதாய்க் கட்டியழும்
கல்லாத மாந்தர்களின் கண்திறக்க வந்தவனே!
பொல்லாத சாதி சமயப் பிரிவுகளாம்
வல்லிருளை மாய்க்கும் வகையான பேரொளியே!

ஊரார் பழிநீக்கி உள்ளம் குளிர்விக்கப்
போராட வந்த புறப்பாட்டின் முத்திரையே !
ஊமைகளாய் வாய்மூடி ஒன்றும் விளங்காத
ஆமைகளாய் நாட்டில் அடங்கிக் கிடப்பதுவோ ?
என்றுரைத்து நாட்டில் எழுச்சியுள்ள தோழர்களை
ஒன்றாய்த் திரட்டி உழைப்பின் பெருமையினைப்
பாரறியச் செய்யும் பகுத்தறிவுச் செங்கதிரே !
சீருயர்த்த வந்த செழும்புகழே கண்ணுறங்கு
எங்கே கொடுமை எதிர்திரண்டு வந்தாலும்
பொங்கும் கனலாய்ப் பொசுக்க நினைப்பவனே !
பொய்யும் புனைசுருட்டும் போற்றித் திரிவாரின்
மெய்யுருவைக் காட்டவந்த மேன்மைத் திருவுருவே !
எல்லாம் பொதுவென்ற எண்ணம் வளர்ப்பவனே !
தொல்புகழை இந்நாட்டில் தோற்றுவிக்க வல்லவனே !
தென்னவரின் மானத்தைத் தீந்தமிழை எஞ்ஞான்றும்
தன்னுயிராய்க் கொள்ளும் தமிழ்மகனே கண்ணுறங்கு !

"உ. த மு. க. வில் சேர்மின்" -துலங்கொளி.

மூடப் பழக்கம் முற்றுந் துறந்து
நாடிட வேண்டும் நன்முன் னேற்றம்

ஓடிய நாட்களில் உற்ற துன்பம்
கோடிக் கணக்கில் கூறின் விரியும் !
பாடிப் பாடிப் பயனென் கண்டோம்?
பகட்டுக் குழைத்துப் பாழாய்ப் போனோம்

ஏய்த்துப் பிழைப்போர் எண்ணிலர்; எண்ணிலர்.
எந்தமிழ் மொழிஇனம் இடாப்படல் மெய்யே !
சொந்த மண்ணிலும் சென்ற இடத்திலும்
நொந்தே அழிவது நுவலவும் நோமே !

எந்த வகையில் இதற்கே உழைப்பது
அந்த வகையை ஆய்ந்துடன் தேர்மின் !
தந்நல முனைப்பால் தருக்கித் திரிந்திடும்
இந்நிலத் தலைகள் இழிவின் முகடுகள் !

அந்நிலை மாற்றி அயர்வைப் போக்கி
செந்நிலை காணச் செழித்து வாழச்
சேர்மின் உலகத் தமிழின முன்னேற்றக்
கழகத் தொருங்கிணைந் துய்வு எய்தவே !

"குழந்தைகள் இல்லா வீடு"

— வேலூர். ம. நாராயணன்., க. மு.

"இன்தமிழ் நாட்டி லெங்கும்
    இலக்கியக் கழகந் தோன்றி
நன்முறை இயங்கல் வேண்டும்;
    நற்றமிழ் காத்தல் வேண்டும்;
ஒன்றிய உள்ளங் கொண்டு
    ஒற்றுமைப் போர்வா ளேந்திக்
குன்றென நிமிர்ந்து நின்று
    குறள்நெறி பரப்பல் வேண்டும்!

அறிவினை வளர்ப்ப தற்கும்
    அறந்தனைப் போற்று தற்கும்
அறிஞர்கள் அந்த நாளில்
    அருந்தமிழ்ப் பனுவல் தந்தார்;
எரிந்திடும் நெருப்பே போலும்
    இளமைப்பா லுணர்வைத் தூண்டி
நரம்பினில் தளர்ச்சி கூட்டும்
    நூல்களை இந்நாள் ஈவார்!

நல்லன நல்கும் நூல்கள்
    நலிந்தன இவைதா மென்றே
தெள்ளென வெளிச்சம் போட்டுத்
    துணிவுடன் எடுத்துக் காட்ட
உள்ளவோர் நல்ல வாய்ப்பு
    ஊர்தொறும் தேவை என்றால்
நல்லவர் பலருஞ் சேர்ந்து
    இலக்கியக் கழகம்! நாட்டீர்!

நானிலம் போற்று கின்ற
    நற்றமிழ் வாணர் தம்மைத்
தானினங் கண்டு கொண்டு
    தக்கநல் மேடை தந்து
தேனினு மினிய அன்னார்
    சொற்பொழி வதனைக் கேட்போம்;
மானமும் மனத்தில் அன்பும்
    மல்குதற் கதுவே ஆறும்!

இலக்கியக் கழக மின்றி
    இனமொழி வுணர்வு மின்றித்
துலங்கிடும் அறிவில் தூய்மை
    தோய்ந்திடும் நெஞ்ச மின்றி

விலங்கென வாழு வோர்கள்
மலிந்தடும் எந்த நாடும்
கலகலப் பாய்க்கூத் தாடும்
குழந்தைகள் இல்லா வீடே!''

புன்னெறிபோக்கி நன்னெறி நாட்டுக!

—கா. பொ. இரத்தினம், இலங்கை.

அடுக்கடுக்காய் மாடங்கள்
அமைந்துயர்ந்த மாளிகையை அமைத்துச், செல்வர்
மிடுக்குடனே பகட்டுவாழ்வு
மிகக்காட்டிக் கூத்தாட மிடியாற் பல்லோர்
படுக்கவுமே இடமின்றிப்
பயந்த செல்வக் குழந்தைக்கும் பருக்கை இன்றி
ஒடுக்கியநோய் வருந்திடவே
ஒருவழியுங் காணமல் உலேவர் நாளும்!

பள்ளத்தில் விழுந்துமிகப்
பரிதவிக்கும் குருடர்போற் பகைத்துத் துன்ப
வெள்ளத்தின் கரைகாண
விரையும் இம் மக்களுக்கு விடிவே இல்லை;
உள்ளத்தைக் கல்லாக்கி
உணர்வுதனைக் கொன்றிந்த உலகைச் சூறை
கொள்ளத்தான் முயல்கின்ற
கொடியவர்கள் கொழுக்கின்ற கொடுமை என்னே!

இத்தகைய கொடுமையினை
என்றென்றும் நிலைநிறுத்த எண்ணும் நஞ்சர்
எத்தகைய வாழ்வுக்கும
எம்ஊழே காரணமாம் என்று பொல்லாப்
பித்தமது பிடித்தோர் போற்
பிதற்றிடுவார் சாத்திரங்கள் பேசித் தெய்வச்
சித்தமிது என்றிடுவார்
சிந்தனையைக் கொல்லுதற்குச் சிறிதும் நாணர்

நெல்லோடு சேர்ந்துவளர்
நெடுங்களையை வேரோடு நீக்கல் போலப்
புல்லோர்கள் தாம் கொழுக்கப்
போற்றிவரும் புன்னெறியைப் போக்கி இங்கே
எல்லோரும் சமவாழ்வு
எய்திடற்குத் தரும்வழியை ஏற்றம் மிக்க
நல்லோர்கள் நாட்டியின்றே
நலிவோர்க்குச் சமவாய்ப்பு நல்கல் வேண்டும்.

(தமிழீழ விடுதலைப் புலிகளை விடுவிக்கும்படி
அரசுக்கு விடுக்க வேண்டிய)

மாதிரி வேண்டுகோள் படிவம்

[தமிழீழ விடுதலைப் புலிகளைச் சிங்கள அரசிடம் ஒப்படைத்திட வேண்டாம் என்றும், அவர்களுக்கு அரசியல் அடைக்கலம் தர வேண்டும் என்றும், பொதுமக்கள் 'கையெழுத்திட்ட வேண்டுகோள்களை, மாநில நடுவணரசுக்கு விடுக்க வேண்டும் என்று, தென்மொழி விடுத்த அறிக்கை அடிப்படையில், ஆயிரக்கணக்காகக் கையெழுத்துகளிட்ட நூற்றுக் கணக்கான வேண்டுகோள்கள் அரசுக்கு விடுக்கப் பெற்று, அவற்றின் படிகள் தென்மொழிக்கும் கிடைத்து வருகின்றன. ஆனால் சிலர் அவ் வேண்டுகோள்களின் மாதிரிப் படிவத்தை இதழில் வெளியிடுமாறு கேட்டிருக்கின்றனர். அவர்களின் வேண்டுகோளின்படி இப் படிவம் இங்கு வெளியிடப் பெறுகிறது. அன்பர்கள் இதைப் படியெடுத்து, இத்துடன் வேறு வெற்றுத் தாள்களை இணைத்து, அவற்றில் பொதுமக்களின் கையெழுத்துகளைப் பெற்று, அறிக்கையில் கண்ட முகவரிகளுக்கு விடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். — **ஆசிரியர்.**]

தமிழீழ விடுதலைப் புலிகளைக் காப்பாற்றுங்கள்

SAVE LIBERATION TIGERS

அன்புடையீர், வணக்கம்.

தமிழீழ விடுதலைக்காகப் போராடும் தீவிரக் கொள்கையுடைய விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிலர், அண்மையில், சென்னையில் தமக்குள், கொண்ட கொள்கைப் பூசல்களின் காரணமாக, ஒருவரையொருவர் கைத்துமுக்கி (துப்பாக்கி)யால் சுட்டுக் கொண்டதும், அதனால் தமிழகக் காவல் துறையினரால் சிறையில் வைக்கப் பெற்றிருப்பதும் தாங்கள் அறிந்ததே.

இலங்கையில் தமிழீழத்தின் விடுதலைக்காகத் தங்களின் உடல், உயிர், வாழ்க்கை ஆகிய அனைத்தையும் பொருட்படுத்தாமல், உலகவாழ்வியல் நலன்கள் அனைத்தையும் துறந்து தமிழீழ விடுதலை ஒன்றையே தம் வாணாள் குறிக்கோளாகக் கொண்டு ஓரியக்கமாக இருந்து வரும் விடுதலைப் போராட்ட மறவர்களே அவ் விடுதலைப் புலிகள் எனப்படுவோர்.

அவர்கள் நம்முடைய நாட்டில் வன்முறைகளை விளைவிக்க வந்தவர்களோ அல்லது விளைவித்தவர்களோ அல்லர் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அவர்களின் நாடாகிய இலங்

கையில் கூட அவர்கள் மதிக்கத் தகுந்த அரசியல் குற்றவாளிகளே! வெளிப்படையாகச் சொல்வதானுல், வெறுந் தந்நல அரசியல்காரர்களைவிட, அவர்கள் பல நூறு மடங்கு சிறந்தவர்கள். புதிய மறுமலர்ச்சி வரலாற்றை விளக்கப் புகுந்த வீர மறவர்களேயாவர்.

ஒரு நாட்டின் ஆட்சிமுறைப்படி, அந் நாட்டின் பகுதி மக்களுக்காக விடுதலை உரிமைக்குப் போராடுவோர்கள், அந் நாட்டின் குற்றவாளிகளாகத்தாம் கருதப்படுவர். ஆனல் அந்த வகையில் **அவர்கள் வேறொரு நாட்டில் குற்றவாளிகளல்லர்.** நம் நாட்டைப் பொறுத்த மட்டில் அவர்கள் நுழைவிசைவு (விசா) இல்லாமல் இந்த நாட்டிற்குள் நுழைந்ததும், தங்கியிருந்ததும், உரிமம் (லைசென்சு) இல்லாமல் துமுக்கி வைத்திருந்ததும், அவற்றைக் கொண்டு இவர்கள் தமக்குள் சுட்டுக் கொண்டதும் போன்ற குற்றங்களே இந் நாட்டிற்குள் அவர்கள் செய்தனவாகக் கருதப்படும் குற்றங்கள். இங்குள்ள அரசு நடைமுறைச் சட்டங்களின்படி தண்டனை அளிக்கப்படுவதை யாரும் குறைகூற வாய்ப்பில்லை. அவர்களைச் சிங்கள அரசிடம் ஒப்படைப்பதற்கு ஏற்ற சட்ட அடிப்படை இல்லை. ஏனென்ருல், அவர்கள் ஒரு நாட்டின் உரிமைக்காகப் போராடும் ஈக(தியாக)ச் செம்மல்கள். குற்றவாளிப் பட்டியலில், சேர்க்குமளவு அவர்கள் குற்றவாளிகள் அல்லர். அப்படிப் பார்த்தால் இந்திய விடுதலைக்காகப் போராடியவர்களும் குற்றவாளிகளே.

ஆகவே, அவர்களின்மேல் நம் நாட்டில் இருப்பதாகக் கூறும் குற்றங்களை மட்டும் வழக்கு மன்றத்தின் வழியாக ஆய்ந்து, அவற்றுக்குரிய தண்டனைகளைத் தந்து, அத் தண்டனைக் காலம் முடிவடைந்ததும் அவர்கள் அனைவர்க்கும் அரசியல் அடைக்கலம் கொடுத்து அவர்களை இங்கேயே இருக்குமபடி செய்திட அரசு தீர்மானிக்க வேண்டும். எக் காரணத்தைக் கொண்டும் அவ்விளைஞர்களை இலங்கை அரசிடம் ஒப்படைத்தல் கூடாது. அந்த இளைஞர்களுக்கு ஆதரவாகத் தமிழகத் தலைவர்கள் குரல் கொடுத்திருப்பதையும் மதித்து, தமிழீழ விடுதலைப் புலிகளைக் காப்பாற்றுங்கள் எனத் தமிழர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிருேம்.

Dear Sir/Madam,

Please permit us to bring to your kind attention the recent arrest of a few extremist youths from Tamizh Eelazham. They are known as Liberation Tigers and they fight against-Sri Lanka government to establish an independent Tamil Eezham. The Tamil Nadu government arrested them when they allegedly indulged in mutual shooting due to ideological differences.

The Liberation Tigers carry on the freedom struggle sacrificing every thing-life, liberty and property. They have not come to our country to carry on any violent activities. Even in Sri Lanka they are only respected political offenders. They have not committed any offence aganist our people. At the same time, we don't deny the right of the state government to punish them for any offence committed according to the laws of our land.

But we object handing them over to Sri Lanka government as they are great sacrificers for the cause of liberating their Eezham Nation. They are on par with those who fought for Indian Independence.

Tamizh leaders belonging to different movements have pleaded against their extradition.

Under these circumstances we humbly request the government of India not to send away the liberation Tigers to Sri Lanka but to treat them as repatriots and to permit them to stay on in our country.

Thanking you,

பொதுமக்களின் கையொப்பங்கள் : Yours Sincerely,

Signatures.

அனைத்துத் தமிழர்க்கும் ஒரு வேண்டுகோள் !

தமிழகத்தில் தளைப்படுத்தப்பட்டுள்ள தமிழீழ விடுதலை வீரர்களுக்கு அரசியல் அடைக்கலம் தரும்படியும், அவர்கள் சிங்கள அரசிடம் ஒப்படைக்கப்படாமல் தமிழகத்திலேயே தங்கியிருக்கும்படியும் வேண்டுகோள் ஒன்றை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி அல்லது தட்டச்சுச் செய்து அவற்றை நான்கு படிகள் எடுத்து, அந்நான்கு படிகளிலும், ஆங்காங்குள்ள தமிழர்களிடம் ஆயிரக்கணக்கில் கையொப்பங்கள் வாங்கி, அவற்றுள் ஒன்றை இந்தியத் தலைமையமைச்சர்க்கும், மற்றொன்றை இந்திய அயலகத்துறை அமைச்சர்க்கும், மூன்றாவதைத் தமிழ்நாடு முதலமைச்சருக்கும் நான்காம் படியை 'முதல்வர், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் சென்னை-5, தமிழ்நாடு' என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம். இவ்வரும் பணியை இன்றே தொடங்குங்கள்! முழு வெற்றி பெறும் வரை தொடருங்கள் !!

சென்னை-5 அன்பன்

5—6—82 பெருஞ்சித்திரனார்

செய்திகள்

1. சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டம்-6. சென்னை-8

கடந்த 29-8-82 ஞாயிறு காலை 10 மணியளவில் ஆறுவது சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டம், தமிழ், சமசுக்கிருதம் பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனத்தில், (19, மார்சல்சாலை, சென்னை-8) பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில், சொல்லாய்வறிஞர் திரு. ப. **அருளி**, வணி.இ.,ச.இ. அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. இக் கூட்டத்தில் வித்து, பழம், பொட்டலம், புத்தகம், புதையல், ஆரம், மூட்டை, புதல்வன் ஆகிய எட்டுச் சொற்கள் ஆயப்பெற்றன. தொடக்கத்தில் பாவலர் **அரங்க சீனிவாசன்** அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சி முடிவில் தொகுப்புரையாளர், பா. **க ப. அறவாணன்** (தமிழ்த்துறைப் பேராசிரியர், இலயோலா கல்லூரி) அவர்கள், சொல்லாய்வறிஞர் ப. அருளியின் ஆய்வுத் திறனை வெகுவாகப் பாராட்டி வியந்து போற்றினார். இறுதியில் இயக்குநர் பா. **ஆறு. அழகப்பனார்** நன்றியுரை கூறினார். நிகழ்ச்சிக்கு வந்திருந்த பெருமக்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வறிஞர் மு.கோ. இராமன், கல்வெட்டுத்துறை ஆய்வறிஞர் நடன காசிநாதன், பன்னூல் வரலாற்றுப் பேரறிஞர் ந. சுப்பு (இரெட்டியார்), முதலியோராவர். நிறுவனத்தைச் சேர்ந்த புலவர். **வீரன்** அவர்களின் ஒத்துழைப்புப் பணி இச் சொல்லாய்வுச் சுற்றுக் கூட்ட நிகழ்ச்சிகள் அனைத்திலும் குறிப்பிடத்தக்க பெருமை வாய்ந்ததாகும்.

அடுத்த 7-ஆவது சொல்லாய்வுச் சுற்றுக் கூட்டம் வரும் 5-10-82 செவ்வாய் மாலை 5 மணியளவில் நடைபெறும். தொகுப்புரை வழங்கவிருப்பவர் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் க.மு. அவர்களாவர்.

2 முல்லைநாதன்—சுடர்மதி வாழ்க

சென்ற 6-9-82 திங்கட்கிழமை காலை 10 மணியளவில், தெ.ஆ. மாவட்டம் திட்டக்குடி, சி.ஆர். அரிசி ஆலை அரங்கில் மருத்துவர் **இரா. முல்லைநாதன்** அறி.இ., மரு.இ, அவர்களுக்கும், மருத்துவர். **சுடர்மதி** (சோதி) மரு.இ. அவர்களுக்கும், பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் தமிழ்த்திருமணம் இனிதே நடைபெற்றது. தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று ச. இராமலிங்கம் அவர்கள் உரையாற்றினார். தலைவரின் முன்னுரைக்கும், திருமண நிகழ்விற்கும் பின், திருவாளர்கள் புலவர் **மா. முத்தழகனார்** (திட்டக்குடி வட்ட உ.த மு.க. பொருளர்), **ந. பெரியசாமி.** அறி.இ, கல்.இ, ஆகியோர் இலக்கிய நயத்துடனும் அறவுரையுடனும், மருத்

துவர்கள் இராசசேகர். மரு மு. (M D.), தெய்வீகன் அறு.மு. (M S). கருணாநிதி, பரிமளாதேவி. மரு.இ. ஆகியோர் நகையும் சுவையும் கலந்த அன்புரையுடனும் வாழ்த்துரைகள் வழங்கினர். இறுதியில் தலைவரின் சிறந்த இனிய வாழ்த்துரையை அனைவரும் அமைதியுடன் கேட்டு மகிழ்ந்தனர். இறுதியில் மருத்துவர் பி. செல்லமுத்து நன்றி நவின்றார். நிகழ்ச்சிக்கிடையில் புலவர் **மா. மூத்தழகனார்** அவர்கள் சார்பிலும், மணமக்கள் சார்பிலும், தலைவர் **பாவலரேறு** அவர்களுக்குப் பொன்னிழைக் கைத்தறி யாடைகள் அணிவிக்கப் பெற்றன. அத்துடன், தென்னார்க்காடு-தெற்கு மாவட்ட உ.த.மு.க. பொருளர் புலவர் **இரா. தமிழ்வேந்தன் எழில்** அவர்கள் பாவலரேறு அவர்களுக்கு மாலைக்குப் பகரமாகப் பத்து உருபா அன்பளிப்புச் செய்தார். மணவிழா நிகழ்வுக்குப் பின் அனைவர்க்கும் பதினறு வகை உணவுப் பொருள்களுடன் இனிய சுவையான விருந்து பரிமாறப் பெற்றதும், வழிச் செலவினின்று பாவலரேறு அவர்களை இடைமறித்துக் கோவையினின்று நிகழ்ச்சிக்கு அழைத்து வரவும் திரும்பச் சேர்க்கவும் மகிழுந்துக்கு உருபா எழுநூறுக்கு மேல் செலவு செய்ததும், வியந்து போற்றிக் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சிகளாகும். இத் திருமண நிகழ்ச்சியில் பாவலரேறு அவர்களுடன் புதுவை மாநில உ.த.மு.க. அமைப்பாளரும், சொல்லாய்வறிஞரும் ஆகிய ப. **அருளி** அவர்களும், திருச்சி மாவட்ட உ.த.மு க. செயலர். நாரா. **மகிழ்நன்** அவர்களும் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. திரு. செந்தமிழ்நாவன் அவர்களின் அன்பளிப்பு உரு பத்து.

8. திரு.வி.க. நூற்றாண்டு விழா – சூலூர்.

கடந்த 9-9-82 வியாழனன்று, மாலை 8 மணியளவில், அண்ணா சீரணி கலையரங்கத்தில், கோவை மா.வ. சூலூர் தமிழர் பேரவையின் சார்பாக, திரு. வி.க. நூற்றாண்டு விழாச் சிறப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திரு. **அற்புதசாமி** தலைமை தாங்கினார். தொடக்கத்தில் திரு. சூ.இரா. சுப்பிரமணியம் தமிழின உணர்வுப் பாடல்களைப் பாடினார். நிகழ்ச்சியில் தி.மு.க. முன்னாள் நகரச் செயலர் எசு. பி. **சண்முகம்**, ஏ.எசு.ஏ. தூயமணி (தி.மு.க.), பி. துரையரசன், ஆறுமுகம் (காமராசு பேராயம்), ப. குணசேகரன், தென்மொழி க. தமிழப்பன், தென்மொழி ந முத்துக்குமரன், வேங்கடாசலம் (இந்திரா பேராயம்), தி.க. மாநில இளைஞர் அணிச் செயலர் **கு. இராமகிருட்டிணன்**, சொல்லாய்வறிஞர் ப. **அருளி**, கோவை மாவட்ட உ.த.மு.க. தலைவர் **கு.வெ கி. ஆசான்** ஆகியோர் சிறப்புரை யாற்றினர். இறுதியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் அரியதொரு சிறப்புப் பேருரையாற்றினார். சூ.இரா. பன்னீர்ச் செல்வம் அவர்களின் நன்றியுரையுடன் இரவு 12 மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது. அதன்பின் அன்பர்களின் கலந்துரையாடல் நிகழ்ந்தது. அன்பர்களின் வினாக்களுக்குப் பாவலரேறு அவர்களும் ஆசான் அவர்களும் தக்க விடைகள் கூறி, அவர்களை

நிறைவு செய்தனர். இரவு 2 மணியளவில், சூலூர் அன்பர்களின் இனிய விருந்தோம்பலுக்குப் பின் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. கூட்டத்திற்கு உள்ளூர் வெளியூர் அன்பர்கள் வந்திருந்து நள்ளிரவு வரையில் கலையாமல் இருந்தது குறிப்பிடத் தக்கது.

4. தருமலிங்கம்—செந்தமிழ்ச் செல்வி வாழ்க!

சென்ற தி.பி. 2013 மடங்கல் (ஆவணி) 31 (16.9-82) ஆம் பக்கல் வியாழக்கிழமை 9 மணியளவில், உடையார் பாளையம் வட்டம் குவாகத்தில், விளந்தைக் கிளை நூலகரும் நெடுநாளைய தென்மொழி யன்பரும் ஆகிய **கே. தருமலிங்கத்திற்கும்**, செல்வி. **செந்தமிழ்ச் செல்விக்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் தமிழர் திருமண விழா இனிது நிறைவேறியது. தொடக்கத்தில் கல்வெட்டு, அரசினர் பள்ளித் தலைமையாசிரியர் கோ. இராமச்சந்திரன் வரவேற்புரையாற்றினார். அதையடுத்து, மணமக்களை அம்பல் தமிழாசிரியர் புலவர் நா. தண்டபாணி க.இ., இல.இ., கல்.இ, குவாகம் தமிழாசிரியர் புலவர் ந இராமானுசம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை ஆராய்ச்சியாளர். **கு. இராசேந்திரன்** க.மு., சொல்லாய்வறிஞர் **ப. அருளி**, வணி.இ, ச இ. ஆகியோர் மணமக்களை வாழ்த்தியுரையாற்றிய பின்னர், பாவலரேறு அவர்கள் அரிய சிறந்த வாழ்வியலுரை ஒன்றை ஏறத்தாழ இரண்டு மணிநேரம் நிகழ்த்தினார். இறுதியில் செந்துறை வட்டாரப் புள்ளியியல் ஆய்வாளர் **சா. தங்கராசு**. க.மு. அவர்கள் நன்றியுரையுடன் மணவிழா நிறைவுற்றது. அன்று மாலை 5 மணியளவில், செயங்கொண்டம் பொதுப்பணித்துறை வழி போக்கர் விடுதியில் பாவலரேறு அவர்களுடன் அன்பர்களின் கலந்துரையாடல் நிகழ்ச்சி யொன்று நடந்ததும் குறிப்பிடத் தக்கது.

விற்பனைக்கு அணியம்

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் அரிய நூல்கள் மறுபதிப்பு அச்சாகி முடிந்து விற்பனைக்கு அணியமாக இருக்கின்றன. அஞ்சலில் பெற அன்பர்கள் எழுதிக் கேட்க!

1.	கொய்யாக்கனி (பாவியம்)	—	9-50
2.	தன்னுணர்வு (அரிய கட்டுரை)	—	1-50
3.	ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்.	—	2-25
4.	உலகியல் நூறு	—	6-00

பிறவெளியீடு:

இந்திசிக்கலும் இறுதித்தீர்வும் (மலிவுப்பதிப்பு) — 1-00

(கு. ச. ஆனந்தன்.) சிறப்புப் பதிப்பு — 1-50

பிற விளக்கங்கட்கு: அமைச்சர் — 'தென்மொழி' — சென்னை-5.

மேலாக அடிமைப்படுத்தி ஆள்கிறதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அப்படியென்றால், எவ்வளவு காலம் போராட வேண்டியதிருக்கும் என்று நீங்களே எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். இருந்தாலும் போராட்டத்தின் கடுமையைப் பொறுத்துக் கால இடையீடு குறையவும் செய்யலாமன்றோ ?' என்றார்கள். இது முழு உண்மைதான். நமது போராட்ட முறையைக் கடுமைப்படுத்தித்தான் ஆகவேண்டும். போராடும் துன்பம் நம் குழந்தைகளுக்கு இருக்க விடக்கூடாது. அதற்குத் தாங்கள் ஆவன சூழ வேண்டும். தங்களின் தலைமை, கலைஞரின் ஆற்றல், ஆசிரியர் (விடுதலை) வீரமணி அவர்களின் உழைப்பு—இப்படி நம் நாடு விடுதலைக் கேற்ற நல்ல சூழ் நிலையை இப்போது பெற்றிருக்கிறது. வாய்ப்பை நழுவ விட்டுவிடக் கூடாது. முனைந்து செயல்படவேண்டும். துண்டு அறிக்கைகள், சிறு குழு முற்றுகைகள், ஒப்புநாள் தமிழ்ப்பணிகள், பொதுக் கூட்டங்கள், விழாக்கள், மாநாடுகள் என்ற பெயர்களால் ஒல்லும் வகையான் விடுதலை உணர்வைத் தூண்ட வேண்டும்.

— **சாலமோன்ராசு**, விருதுநகர்-1.

0 : 948 : அன்பின் தமிழ்த்திரு ஐயா அவர்களுக்கு, வணக்கம். இதழ்கள் வந்து சேர்ந்தன. தென்மொழியில் "மூச்சுள்ள வரைக்கும் உலகத் தமிழின முன்னேற்றம் ஒன்றே பேசுவேன்" எனும் அட்டைப் பாட்டு பாராட்டத்தக்க, வீரக்கனல் பறக்க எழுதப் பெற்ற ஒரு பாடல் ஆகும். மேலும் இதுபோன்ற இலக்கியச் சுவைமிக்க இனிய பாடல்களை இயற்றித் தென்மொழியில் வெளியிடுமாறு மிகவும் பணிவுடனும், தாழ்மையுடனும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் செயங்கொண்டம் வட்டம் குவாகத்தில் திருமணத் தலைமை தாங்கியதாகத் தென்மொழி வாயிலாக அறிந்தேன். தங்களை நான் நேரில் பார்க்க இயலாமைக்கு மனம் வருந்துகிறேன். நான் அன்று தான் "புகுமுக" மேல்நிலை முதலாம் ஆண்டு சேர நேர்ந்தது. எனவே தான் உங்களைப் பார்க்க இயலவில்லை.

— **மு. இளங்கோவன்**, இடைக்கட்டு, திருச்சி.

0 : 949 : பெருமதிப்பிற்குரிய ஐயா, பணிவார்ந்த வணக்கம். 'தென்மொழி' சுவடி 18 ஓலை 11இல், பிறமொழிச் சொல்லாட்சியில் ஊர்ப் பெயர், நாட்டின் பெயர் மக்களின் பெயர் முதலானவற்றை ஒலி பெயர்த்துக் கொள்ளலாமா ?' என்னும் வினாவுக்கு, 'தமிழில் அந்த ஒலிக்குரிய வரிவடிவம் இல்லாக்கால் ஒத்த ஒலியில் எழுதலாம். ஆனால் அது முழுமையான செய்திக்கு உறுதுணையாகாது. காலப்போக்கில் நாமே அதற்கு ஏற்ற வரி வடிவங்களைச் செய்வது வளர்ச்சிக்கு வழி வகுக்கும்'—என விடையளித்திருக்கின்றீர்கள். இதனடிப்படையில் எழுகின்ற கேள்விகளாவன :

1. 'காலப்போக்கில் பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளாகி வந்திருக்கும் தமிழ் வரி வடிவங்களில் மேலும் சில மாறுதல்களைச் செய்து கொள்ளலாம்'—எனப் பெரியார் போன்றவர்கள் கூறிய கருத்துகளினடிப்படையில் தமிழக அரசு மிகச்சிலவான வரிவடிவ மாற்றங்களை நடைமுறைப்படுத்திய போது அதனை வன்மையாகக் கண்டித்த தாங்கள் தற்போது, பிறமொழிச் சொற்களின் ஒலிகளுக் கேற்ற வரிவடிவங்களைப் புதிதாக—கூடுதலாக ஆக்கிக் கொள்ளலாம் என்கின்றீர்கள். இது மனமாற்றமா? மனமயக்கமா?

2 பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்த நேரும்போது அச்சொற்களை அப் பிறமொழியாளர் போலவே ஒலிக்க வேண்டும். அதற்கேற்ற வரிவடிவங்களை நமது மொழியில் அமைத்துக் கொ…

வேண்டும் எனத் தொடங்கிவிட்டால் அப்புறம் அதற்கு முடிவு ஏது? மொழி என்னும் வரையறைதான் ஏது? நெடுங்கணக்கு என்பது 'நீள்கணக்'காக அன்றோ ஆகும்?

3. 'இடப் பெயர்களையும், மக்களின் இயற் பெயர்களையும் மொழி பெயர்த்தல் தகாது' என்கின்றீர்கள். உண்மை. அப்புறம், அவற்றை ஒலி பெயர்க்கவும் தயங்கி, அவற்றுக்குரிய வரிவடிவங்களை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்கின்றீர்கள். அப்புறம், Ohms, Wait முதலான அளவைப் பெயர்களையும், Radar முதலான பொருட் பெயர்களையும்கூட அப்படியே வழங்குவது சிறப்பு என்கின்றீர்கள். அப்புறம், அறிவியல், கணக்கியல் குறியீட்டுச் சொற்களையும் அந்தக் குறியீடுகளாகவே வழங்க வேண்டும் என்கின்றீர்கள். இவ்வளவுக்குப் பிறகும், ''தனித்தமிழ்'' என்பதையும் ஏன் கட்டி மாரடிக்கின்றீர்கள்? கொள்கையில் தெளிவற்றவர்கள் வழிகாட்டும் தகுதியை மட்டுமன்று வழி நடக்கும் தகுதியையும் இழந்துவிடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். —புலவர். **சா. பன்னீர்ச் செல்வம்**, பட்டுக்கோட்டை.

0 : 950 : அறிவார்ந்த ஐயா! பணிவான வணக்கங்கள். தங்களைக் கழகப் பொறுப்பாளர் அமர்த்தச் சுற்றுச் செலவின் போது திண்டுக்கல் வழிப்போக்கர் விடுதியில் கண்டு தங்கள் மேலான அறிவுரை பெற்று மிகவும் மகிழ்ந்தேன். அதன்வழி நடக்கவே ஆர்வமாயுள்ளேன். எனக்கு இரண்டாண்டுகளாய்த் 'தென்மொழி' காணும் வாய்ப்புக் கிட்டியது. இங்கே பொதுவுடைமை(?)யா(ள)ர்கள் தனித் தமிழ் என்றால் வயிறு பசிக்காதா, அல்லது சோறுபோடுமா, சோறு முகாமையா, அல்லது உடை முகாமையா, என்று பகடி செய்து கொண்டுள்ளனர். அவர்களுக்காக நாம் எவ்வகையில் இரக்கப்படுவது எனப் புரியவில்லை. தமிழினம் என்பது 'குறுகிய வட்டமாம்'. மாசுக்கோவில் மழை பெய்தால் மதுரையில் குடைபிடிக்கும் இவர்கள் பெருந்தன்மை. பொருளியல் அடிப்படைச் சீர்திருத்தம் உழைக்காமலே பெறவிரும்புகின்றனர். சிவப்புக் கொடிகண்டு அரற்றிக் கொண்டிருக்கிறார்கள்,—ஏதோ, இராமமூர்த்திகள் பொதுவுடைமையைக் கண்டுபிடித்தது போல. பிரசுனேவ் ஆங்கிலம் பேச அணியமாவாரா என்பது என் ஐயப்பாடு. இராமமூர்த்தி வீட்டு வாயிற் படியேற விடுவார்களா, பார்ப்பனரல்லாதவரை? இஃது என் கேள்வி. ஆனால் விடை இல்லை. — **கதிர்குன்றன்**, அமரர் பூண்டி.

0 : 951 : மதிப்பிற்குரிய பார்போற்றும் ஐயா, பாவலரேறு அவர்களுக்குத் தன்மானத்தையும் இனமானத்தையும் கொள்கையாகக் கொண்ட இயக்கமான உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக்கொண்ட அ. தமிழன்பன் வடிக்கின்ற மடல் !

செவ்விதழ் மங்கையர் வாயசைவில் என் சிந்தை மயங்கவில்லை; நின் செந்தமிழ்ச் செறிவில் என் சிந்தை மயங்கியதை நான் எவ்வாறு எழுதுவேன். எழுதினால் அவை ஏட்டில் அடங்கா! சொற் பொழிவு செய்ய எண்ணினால் சொற்கள் கிடையா!! தங்களின் தமிழ் உரை கேட்டுமட்டுமன்று, இனமானம் காக்கும் இயக்கம் கண்ட தங்கள் இலக்கிய முழக்கம் உறங்கிக்கிடக்கும் இனமான உணர்வுகளைத் தட்டி எழுப்பும் வீரத்தலைவனாக, முத்தமிழ்த்திறவோனைக் கண்டதை நினைத்தால் நெஞ்சமெல்லாம் உவகை கொள்கிறது.

— **ஆ. தமிழன்பன்**, கடையநல்லூர்.